# தென்றல்

ஆசிரியர்... கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, சித்திரை 26 (9-5-'59). சனிக்கிழமை | இதழ் 47



## முடித்தவளும் மொட்டையும்



அதிவீரராம பாண்டியன் கொக்கோகத்தை எழுதியிருக்கலாம்; அரசியல்பற்றிக்கூட எழுதலாம்; ஆனால் தனக்குத் தெரியாத இசைக் கலையைப்பற்றி எழுத முனைந்தால், மக்கள் செவிகளெல்லாம் 'என்ன ஆவது? காமா பயில்வான் மற்போரில் ஈடுபடலாம்; மனித உடல் வளர்ச்சிபற்றி ஒரு நூலும் எழுதலாம். ஆனால் கூத்துக் கலையைப்பற்றி விரிவுரையாற்ற அவர் கிளம்பினால்...காண வருவோர் அதிர்ச்சிக்கு ஆளாகாதும், அரங்கம் நொறுங்காதும் இருக்கவேண்டுமே!

ஆனால் இங்கொரு அதிசயப்பிறவி இருக்கிறார். கூலிக்கு மாரடித்தல் என்ற தொடர் உயிர் வாழ்வதே அவர் உயிர் வாழ்வதால்தான். சண்டப்பிரசண்டப் புலியாகத் திரியும் அந்த சகல கலாவாணர் கொஞ்ச நாளாய் அரசியலை வேறு அலசுகிறார். அய்யோ. தென்னகமே! மூளை நூறுயிரம் படைத்த மூதறிஞர் இவரை இதுவரை எந்த மூலையில் வைத்திருந்தாய்? தமிழகமே! நுழையாத இடம் ஒன்றில்லாத இந்த அழையாத விருந்தாளியை எந்த ஓரத்தில் பேட்டு வைத்திருந்தாய்? எப்படியோ, குப்பையில் கிடந்த கூழாங்கல்லாய், பெட்டியில் கிடந்த செல்லாக் காசாய் இருந்த அவரைத் தமிழகம் இப்போதாகிலும் அறியும் வாய்ப்புக் கிடைத்ததே!

தீவட்டி பிடிப்பதில் திறமை மிக்கவர்; திருமுகம் பல பண்டிதர்களுக்குத் தீட்டுவதில் சமர்த்தர்; தலைமைப் பதவிக்காகவே கழகம் நடத்தும் சூரர்; தாய்நாடு இனிப் பெறமுடியாத வேங்கடத்து வீரர் என்றெல்லாம் பல நூறு பெருமைகளை ஐயிரு திசை முகத்தும் வைத்த அந்தப் பெருமகனார், பிரச்னை வேறு கிடைக்காததாலோ-சூடு ஏற்றிக்கொள்வதற்காகவோ, தி. மு. கழகத்தைச் சாடி வருகிறார். தானே எழுதி, தானே "கம்போஸ்" செய்து, தானே அச்சடித்து, தானே கட்டுப்போட்டு, படிக்க ஆளில்லாததால் தானே படித்துப் பெருமைப்பட்டுக்கொள்ளும் அருமை ஏட்டாசிரியர் அவர்; தம் இனிய கருத்துக்களை இந்த உலகம் உய்வான் வேண்டி, தனது கோல் மூலம் தெரிவிக்கிறார்.

பிரச்னை அவருக்கு வேறு இல்லாமலில்லை; கட்டபொம்மனை முன்னைவிட விரைவாய்த் தூக்கிச் செல்ல வேண்டிய பெரும்பணி ஒன்றுள்ளதே! சூடேற்றிக்கொள்வதற்காகத்தான் தி. மு. கழகத்தைத் தொட்டிருக்கிறார் என்றால், சரியான சூடு போடுவோம்.

ம. பொ. சிவஞானம் எனப்படும் அவர்க்குத் தேர்தல் பற்றிச் சிறு ஞானம்கூட வராது, சுட்டுப் போட்டாலும். ஆனாலும் அவர் செய்யும் திருவிளையாடல்கள் ஒன்றல்ல...... இரண்டல்ல....

நடந்து முடிந்த நகராட்சித் தேர்தல்களைப்பற்றி இவர் மேலான கருத்து மணிகளை உதிர்த்திருக்கிறார்.

"சென்னையிலும் கோவையிலும் சேர்ந்துவிட்டனரே பொதுவுடைமையர் கழகத்தவரோடு! என்னைக் கேட்காமல் சேரலாமா? இருசப்ப கிராமணித் தெரு என்று ஒன்று இருப்பதும் அடியேன் அங்கு வாழ்வதும் உங்கட்குத் தெரியாமலா போயின? கம்யூனிஸ்டுகளே! மாக்கியவல்லியை-மாமேதை லெனினை-அரசியல் வித்தகன் சாக்ரட்டீசை அருகில் வைத்துக்கொண்டேன் ஆலோசனை கேட்காமல் செல்லலாமா?" என்பதாகக் கொக்கரித்திருக்கிறார்.

தன் கட்சியின் சார்பாகச் சென்னையில் எண்ணிப் பத்து ஆட்களை நிறுத்த யோக்கியதை இல்லாத இவர், 45 இடங்களைப் பெற்ற தி. மு. கழகத்தைப் பார்த்துப் பழி தூற்றுகிறார். "எங்கள் கட்சிதான் தேர்தலில் கலந்துகொள்ளாத **கலாச்சார ஸ்தாபனம் ஆயிற்றே!** அது தேர்தலுக்கு ஆட்களை நிறுத்தும் என்று எதிர்பார்ப்பது தவறாயிற்றே!" என்று சொல்லலாம் அவர். அப்படிப் பட்டவர்-அரசியல் பிடிக்காத "விஸ்வாமித்ரர் II"- அரசியல் பிரச்னைகளை விமர்சனம் செய்ததேன்? காலம் போன காலத்தில், வேங்கடம் போன சோகத்தில், மீசையை முறுக்கும் அவர்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

நிற்க, **"சென்னை மேயர் தேர்தலில் ஆதரவளிப்பதாக உறுதி கூறி, கோவை நகர சபைத் தேர்தலில் தி. மு. க.வின் ஆதரவைப் பெற்றது கம்யூனிஸ்ட் கட்சி. ஆம்; பரஸ்பர உதவி!"** என்று கெக்கலி கொட்டுகிறார் தனது ஏட்டின் 3-5-59 இதழில்

அரசியல் கட்சிகள் நாட்டுமக்கள் நன்மைக்குக் கூட்டுச் சேர்கின்றன என்றால், அதைப் பாராட்டவேண்டும். அன்றேல் ஒதுங்கியாகிலும் இருக்க வேண்டும்! சிவஞானத் தமிழர்க்கு அவ்வளவு பொறுமை இல்லை. அவர் கண்ணெதிரேயே பல கூட்டுக்கள் நடந்திருக்கின்றன. டில்லியில் அருணா ஆசப் அலி மேயராக வருவதற்குக் காங்கிரசும் தானே ஒத்துழைத்தது? அப்போது இவர் "இப்படிச் சேர்வது தப்பு" எனத் தப்பெடுத்து முழக்கினாரா? அல்லாமலும் "சென்னையில் தன் பதி தோற்றால் தாலி அறுந்துவிடுமே!" என்பதற்காகப் பொதுவுடையர்க்குத் தோள் கொடுத்தாரே! அப்போது எங்கே போயிற்று இந்த ஆராய்ச்சி? தனி ஒரு தலைவரே! ஒரிசாவிலே நடக்கும் கூட்டு மட்டும் உங்கட்கு ஒப்பா?

கழகமும் பொதுவுடைமை இயக்கமும் செய்துகொண்டது பரஸ்பர உதவிதான்! என்றாலும் நீர் கேலி செய்யக்கூடிய அளவு கேவலமானதன்று. சென்னையை வைத்து, தி. மு. க. பொதுவுடைமையர் துணையில்லாமலே வந்துவிடமுடியும், பதவிக்கு. கோவையிலோ தி. மு. கழகம் இன்றிப் பொதுவுடைமையர் பதவிக்கு வரமுடியுமா? சுயேச்சையாளர் பலர் சென்னையில் பொதுவுடைமைச் சார்பால் வெற்றி பெற்றோம் என்கிறார் ம. பொ. சி.. அதாவது "தி. மு. கழகம் சுயேச்சையாளரை நாடியிருக்கலாமே வேறு வழிகளில்!" என வலை கூறுவதுபோல் எழுதுகிறார். தி. மு. கழகம் தனித்தொரு சக்தியாகவே வெல்லமுடியும் சென்னையில். ஆனால் எதிர்க்கட்சிகள் இப்படிப் பிரச்னைகளில் கூட்டுச் சேரவேண்டுமெனவும் கருதுவதால் தான் சேர்ந்தது. தி. மு. கழகத் திற்கோ, முதலில் சென்னையில் பொதுவுடைமையர் துணைகோரும் நினைப்பே இல்லை. கோவைத் தேர்த லில் தமக்கு உதவும்படிப் பொது வுடைமையர் கழக உதவி கேட்டுக் கடிதம் எழுதியபோதுகூட, கழகம் நிதானமாகத்தான் யோசித்தது. "ஏன் இன்னும் பதில் சொல்லவில்லை?" எனப் புதுவைத் தேர்தல் பொதுக் கூட்டத்தில் அவசரப்பட்டுக்கேட்டார் பொதுவுடைமைச் சிந்தன். கழகம் தீர ஆராய்ந்து பார்த்து, "கோவையில் கழக உதவி பொதுவுடைமையர் குக் கிடைக்காவிட்டால், காங்கிரஸ் சுயேச்சைகளின் துணையோடுவெல்ல முடியும்" என்பதைக் கண்டுதான் "எதிர்க்கட்சிகள் கடன் காங்கிரஸை வீழ்த்துதலே" என்பதை நிலைநாட்டத்தான், தன் உதவியைத் தந்தது. கழகம் அன்று உதவியிராவிட்டால் பொதுவுடைமையர் வீழ்ந்திருந்தால் கழகம் துரோகம் செய்துவிட்டது என இவரே சுத்தியடிக்க மாட்டாரா-மன்னிக்கவும் - பேசியிருக்க மாட்டாரா? கட்டாயம் கூரையேறிக் கொக்கரித்திருப்பார்; வேங்கடம் ஏறிக் கொக்கரித்திருப்பார்; குழியில் வீழ்ந்தும் கொக்கரித்திருப்பார்.

இப்போது கழக உதவியுடன் பொதுவுடைமையர் பதவியிலமர்ந்து விட்டதால், திட்டுவதற்கென்று தான் தயாரித்திருந்த அகராதி பயனற்றுப் போனதால்தான் குமுறுகிறார்; கு கிறார். பதிக்கு உடனே சொ

— 8-ம் பக்கம் —

# ★ தாயும் சேயும் தந்தையின் வாயிலில் ★

நடை பாதை யோரத்தில் குழந்தை யென்னும்
நித்திலத்தைக் கரத்தேந்தி வீற்றி ருந்த
மடந்தையினைக் கடைக்கண்ணால் பார்த்த வண்ணம்
மனிதர்கள் நடந்தார்கள் கண்ணீர் முத்து
குடங்குடமாய்ச் சாய்த்தபடி அவளி ருந்தாள்
குளிர்பட்ட கடற்பஞ்சு போல, சின்ன
உடற்சுருக்கி உயிர்சுருக்கி குழந்தை முல்லை
உலர்கின்ற தருவாயில் கிடந்த தாங்கே.

வைகைநதிப் புனல்போலக் கருணை வெள்ளம்
வற்றிவிட்ட காலமிது; வெய்யோன் கூடப்
பொய்கைமலர்க் குழவிமிசை வெப்பம் வாரிப்
பொழிந்தபடி வானத்தில் விரைந்து சென்றான்
மைவிழிகள் நீர்சோரக் கிழிந்த சேலை
விளிம்பாலே குழந்தைமுக நிலவை மூடி
மெய்சோர்ந்து மழைநனைந்த குருவி போல
வாடிப்போய் அமர்ந்திருந்தாள் வகையற் றாளே.

சின்னவிழி நடம்காட்ட எழிற்க ரங்கள்
சிரித்தமுல்லை மலர்போல விரிந்து நிற்க
முன்விழுந்து பின்விழுந்து முறுவல் காட்டி
முகம்பார்த்தத் தாயிதழில் முத்தம் சேர்த்துக்
கன்னலென இனிக்கின்ற மழலை பேசிக்
களிகொண்ட குழந்தையின்று படுக்க நேர்ந்தால்
அன்னைமனம் நோவாதா? கண்ணீர் ஊற்று
அருவியெனப் பாயாதா? இரும்பா நெஞ்சம்?

ஏழையவள்; பொய்யில்லை; கணவ னற்ற
இளம்விதவை கொம்பற்ற பழக்கு லைதான்!
தாழைமடல் மென்கரத்தால் கணவன் மேனி
தட்வியஅக் காலமெலாம் கனவே! இன்று
வாழைமரக் குருத்துநிகர் குழந்தை யொன்றே
வகையற்ற அவள்வாழ்க்கைத் தோணி. செல்வப்
பேழையென எண்ணிற்றவ் வேழை உள்ளம்
புயலடித்தக் கொடிபோலக் குலைந்த தெல்லாம்.

வேலியற்ற பயிரானாள், காவ லில்லா
மாமரமாய் உலகத்தார் கண்ணில் பட்டாள்.
காலிடறி விழுந்தோரைக் கரங்கொ டுத்துக்
காப்பாற்றும் உலகமென நம்பி வாழ்ந்தாள்
வேலிரண்டு நடுமார்பில் பட்ட தன்ன
வேதனையுற் றாள்இன்று பாவம் பேதை
சேலிரண்டு நீர்கொட்டச் சேய்மு கத்தைத்
திறந்தவிழி மூடாமல் பார்த்தி ருந்தாள்.

மருத்துவரை அழைத்துவந்து மகனைக் காட்ட
மாதாவின் மடியிலென்ன பணமா காய்க்கும்?
கருத்தமுகம் நிலம்நோக்கக் கால தேவன்
கற்கோட்டைக் கம்பிகளை எண்ணிக் கொண்டு
வருத்தத்தின் அலைகளிலே ஆழ்ந்தி ருந்தாள்.
வயதான கிழமாது— அண்டை வீட்டாள்
அருகேவந் தமர்ந்தாள். பின் சேயை நோக்கி
ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்றாள்.

அழல்பட்ட அனிச்சம்பூப் போல வாடும்
அருமைமகன் உயிர்காக்க மருந்தே இல்லை
பிழைசெய்ய நினைக்காதே பேதாய் ஈசன்
பிறைசுமந்தச் சடைமீது கங்கை யென்னும்
குழல்மாதைத் தரித்திருப்போன் பாதத்தின் கீழ்க்
குழந்தையினைக் கிடத்திவிடு. அதுவே போதும்
தழைக்காத செடிகொடியைத் தழைக்க வைக்கும்
சிவபெருமான் தீர்க்காத நோயும் உண்டோ?

நீரற்ற குளத்தினிலே தண்ணீர் கண்டு
நெடுமகிழ்ச்சி யடைகின்ற உழவன் போல்
கார்முகிலைக் கூந்தலிலே முடித்தி ருப்போள்
கரைகாணா மகிழ்வெய்திச் சேயைத் தூக்கித்
தாரணிந்த சிவபெருமான் உமையோர் பாகன்
தாரணியைப் புரக்கவல்லோன் கோவில் சென்றாள்.
நீரணிந்த விழிகளுக்கு மாற்றம் கூறு
நிறையோனும் உலகத்தில் வாழ்வ துண்டா?

மணிபதித்த நெடுங்கோவில் மாட கூடம்
மண்பொம்மை கொலுவிருக்கும் கலையார் வீடு
அணியானை புரவிகளில் பவனி வந்து
அரசகுலம் சிரந்தாழ்த்தும் புனித இல்லம்
பிணியாளர் படையெடுத்துக் கடவுள் பேரில்
பண்ணாரம் தொடுக்கின்ற கவிதைக் காடு
தணியாத வேட்கையுடன் ஆங்கு சென்ற
தடங்கண்ணாள் குறைமட்டும் தீர வில்லை.

இடைமறித்த பூசாரி அவளின் முன்னே
இதமாக எடுத்துரைத்தான்: "பெண்ணே உள்ளே
கடைச்சாதி மக்களெலாம் நுழைதல் பாவம்
கண்ணுதலோன் சினம்பொங்கி உலகை மாய்ப்பான்
நடைபாதை யோரத்தில் நின்ற வண்ணம்
நாயகனை வணங்கியபின் வீடு செல்வாய்
தடையின்றி உன்மைந்தன் நோயும் நீங்கும்
தாரணியில் பலகாலம் வாழ்வீர் நீவிர்".

இதுவரையில் ஆண்டவனை அறியாப் பேதை
இன்றுமட்டும் தாள்வணங்கக் கோவில் சென்றாள்
கதவடைப்பு நிகழ்ந்துவிட உள்ளம் சோர்ந்து
கடல்பட்ட துரும்பாகத் துடித்தாள் மங்கை
பொதுவான ஆண்டவனே தாழ்ந்த வர்க்குப்
புறம்காட்டி முகமறைத்து ஒளிந்து கொண்டால்
பொதுவுடமைத் தத்துவந்தான் இந்த நாட்டில்
பலன்தருமா என்றெண்ணிப் பாரீர் நெஞ்சில்.

மகனுயிரைக் காப்பாற்றும் நோக்கத் தோடு
மங்கையவள் கோவிலுக்குச் சென்றா ளன்றிச்
சுகங்கண்டு தான்வாழச் சென்றா ளில்லை
சுவைப்பாலை நறுநெய்யை எடுத்துக் கொண்டு
அகஞ்செல்ல நினைக்கவில்லை, எனினும் கூட
ஆண்டவனின் முகம்காண இயல வில்லை
வகையற்ற நிலையெண்ணி மனம்வ ருந்தி
வாள்விழியில் நீர்சோர நடந்தே சென்றாள்.

பனிநிலவு பனிவரும் இரவு வேளை
பைங்கிளியின் உடற்காய்ச்சல் நெருப்பாய் ஏற
இனிமேலும் பொறுத்துக்கொண் டமர்ந்தி ருத்தல்
இயலாதென் றெண்ணிமனம் நொந்து, வெந்து
குனியாத நெடுமாடக் கோவில் முன்னே
களவாடத் துணிந்துவிட்ட பெண்போல் நின்றாள்
கனியாத மனம்கொண்ட மக்க ளெல்லாம்
கண்மூடி நித்திரையில் சூழ்ந்து விட்டார்.

கால்தூக்கி நடமாடி உலகைக் காத்த
கண்ணுதலோன் திருமுன்னம் குழந்தை தன்னை
வேல்விழியாள் கிடத்திவிட நினைத்து, மெல்ல
வெளிப்புறமாய்க் கதவினொரு புறம்தி றந்தான்
ஆலிலையும் அசையாத இரவில் அந்த
ஆரணங்கு திறந்திட்ட கதவின் சத்தம்
மேல்புறத்தில் உறங்கிக்கொண் டிருந்த கோவில்
மேலாளன், பூசாரி கேட்டே விட்டான்.

கோவலனைப் பறிகொடுத்த சிலம்புச் செல்வி
கண்கலங்கி குழல்சரிந்து மரத்தின் கீழே
நாவடங்கி மெய்யொடுங்கி நின்ற தைப்போல்
நங்கையவள் குழந்தையொடு நின்றி ருந்தாள்
பூவரசன் பதவிக்குத் தள்ளப் பட்ட
பூசாரி வெளிவந்து அவளைப் பார்த்தான்
கூவாத குயில்மீது குற்றம் சாட்டக்
குறைமதியும் எண்ணிற்று கூவி விட்டான்.

தீப்பற்றி எரிகின்ற வீட்டின் முன்னே
திரளாகக் கூடுகின்ற மக்கள் போல
கூப்பாடு போட்டபடி ஊரா ரெல்லாம்
காரிகையைச் சூழ்ந்தபடி நின்றார் வந்து
வேப்பங்காய் மென்றவள்போல் விதவை நின்றாள்
விரிசடையோன் நகையெல்லாம் திருட வேண்டி
தாழ்ப்பாளைத் திறக்கின்ற நேரத் தில்நான்
சடக்கென்று பிடித்துவிட்டேன் என்றான் ஐயன்.

புலைச்சிக்குச் சிவபெருமான் நகையா என்றும்
புரியாத ஊர்மக்கள் அடித்தே விட்டார்
தலையிலடி காலிலடி உடலி லெல்லாம்
சரியான கல்லடியைப் பரிசாய்த் தந்தார்
அலைபட்ட மணல்வீ டாய்க் கரைந்த துள்ளம்
அழல்பட்ட புழுப்போலத் துடித்தாள் பேதை
நிலையற்ற அவள்வாழ்வில் இன்பம் தந்த
நித்திலமோ நிம்மதியாய் உறங்கி விட்டான்.

விரியாத இளமொட்டில் கருகிப் போன
மழலைமொழிச் செல்வத்தை அணைத்த வண்ணம்
எரிவிழிகள் நீர்சுரக்க மங்கை நின்றாள்
எல்லோரும் அவரவர்கள் வீடு சேர்ந்தார்
நரிபுத்திப் பார்ப்பானின் வஞ்ச கத்தை
நங்கையவள் மனத்தெண்ணி நைந்தா ளாகி
விரிசடையோன் உருவத்தை வழியில் நின்றே
வணங்கிவிட்டுச் சுடுகாடு நோக்கிச் சென்றாள்.

மூலம்: இந்திக் கவிதை ஒன்று. —துறையூர், ந. அலி.




ஆற்றுநீரின் சலசலப்பும், ஆலமரத்தின் நிழலும் வேலனுக்கு அந்த உச்சி வேளையில் உற்சாகத்தைக் கொடுத்தாலும், அவன் யாரையோ எதிர்பார்த்து ஆற்றின் அக்கரையை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தான்.

கரையோரத்தில் முளையடித்து அழுத்திக் கட்டப்பட்டிருந்த ஓடம் ஆற்றுநீரின் வேகம் தாளாது தத்தளித்துக்கொண்டிருந்தது; வேலனுடைய மனமும் கண்ணம்மாவின் வருகையை எதிர்பார்த்து ஏங்கித் தத்தளித்துக்கொண்டிருந்தது.

வேலன் மனம் பொறுமினான்; எத்தனை நாழிகைதான் அவன் ஆவலோடு காத்திருக்கமுடியும்?

காலையிலேயே அக்கரையை அடுத்த பட்டிணத்திற்குச் சென்றவள் அவ்வளவு நேரம் என்னதான் செய்துகொண்டிருப்பாள்?

காலையிலே கண்ணம்மா கொடுத்த குரல் ஒலிகள், தேனலைகளாக இன்னும் அவன் காதுகளில் ரீங்கார மிட்டவாறே இருந்தன!

'காலையிலே எங்கே கிளம்பிட்டே, கண்ணு'

'பொங்கலுக்கு புதுப்புடவை எடுக்க.'

'தை பிறக்கப் போவுதுன்னு சொல்லு'

'அதை உன் மாமங்கிட்டே போய்ச் சொல்லு.'

கண்ணம்மாவின் சொல் அமுதத்திலேதான் எத்தனைவித உணர்ச்சிகள்?

'சொல்லாமலா இருக்கேன்.... ஆயிரத்தைப் பரிசமாகக் கொண்டாங்கிறாரே...'

'ஆலமரத்தைச் சுத்தின ஆயிரம் எப்போ சேர்க்கிறது... கண்ணம்மா கிழவியான பிறகா?'

'கண்ணம்மா....உன் எண்ணம் எனக்குப் புரியுது. என்னதான் செய்யச் சொல்றே. ஏழுநூறு சேர்த்துப்பிட்டேன். இன்னும் மூனுநூறு பாக்கி. அடுத்த ஆவனி...'

கண்ணம்மா பெருமூச்செறிந்து நின்றாள்.

'கலங்காதே கண்ணு. இன்னும் ஆறு மாசம்.'

'மச்சான் ஆறுமாசம் என்ன? ஆறு வருஷமானாலும் நான் வேறு யாருக்கு?'

'கண்ணம்மா.'

'அதோ பாரு. மச்சான் யார் யாரோ வர்ராங்க. ஓடத்தை எடு.'

'எப்போ திரும்புவே'

'மதியத்துக்குத் திரும்பிடுவேன்.'

'சரி. ஓடத்திலே ஏறிக்கோ.'

'மறந்திடாமக் காத்திரு மச்சான்.'

காத்துக்கொண்டிருந்த வேலன் சோர்ந்து அப்படியே தலையைச் சாய்த்தான்; கண்களை மூடினான்.

'ஓ...மச்சான்.'

வேலன் துள்ளி எழுந்தான். ஆற்றங்கரையிலே கண்ணம்மா நின்றுகொண்டிருந்தாள்.

ஓடம் அக்கரைக்கு ஒரு நொடியில் போய்ச் சேர்ந்தது. கண்ணம்மா முத்துவியர்வை முகத்தில் கோலமிட நின்றுகொண்டிருந்தாள்.

'தூங்கிட்டியா மச்சான்?'

'தூக்கம் எப்படி வரும்...கண்ணம்மா...சும்மா சாய்ந்தேன்...வா... வா......ஏறிக்க......பசி வயித்தைக் கிள்ளுது.'

வேலன் துடுப்பைத் தள்ளினான்.

'புடவை எடுத்தாச்சா.'

'எடுத்தேன் மச்சான்.'

'எவ்வளவுக்கு.'

'எட்டு ரூபா.'

'சல்லீசு....தான்.... கன்னிப்பொங்கலுக்கு மாந்தோப்பு கூட்டாஞ்சோறு?'

'கட்டாயம் மச்சான்.'

'வராம இருப்பேனா....கண்ணு ... எனக்கு என்ன வாங்கியாந்தே.'

'கரும்புத்துண்டு இந்தா.'

முந்தானையில் மறைத்துவைத்திருந்த கரும்புத்துண்டை எடுத்து நீட்டினாள்.

'கரைசேரட்டும். வாங்கிக்கிறேன்.'

கரை சேர்ந்தார்கள்.

'ஏன் சிரிக்கிறே, கண்ணம்மா?'

'உன் பக்கத்திலே இப்போ யாரு இருக்கா?'

வேலன் சிரித்தான்:

வேலன் சொன்னான்: 'என் கண்ணம்மா...பதுமையில்லே. பேசும் பொற்சித்திரம். மாலை வெய்யிலின் தங்கச்சிலை.'

கண்ணம்மா பூரிப்போடு நடந்தாள்.

'என்ன மச்சான், டூரிங்கிலே சினிமாப்படம் பார்த்தியா? எதேதோ உளறுறியே.'

'அந்தச் சினிமாக்காரியை உன் காலிலே கட்டி அடிக்கணும் போ கண்ணம்மா....ஏ. . .கண்ணம்மா.... போறியே நாளைக்கு வருவியா.'

'கட்டாயம்.'

கண்ணம்மா, இடுப்பில் கூடையைத் தாங்கி, அன்னநடை போட்டு மறைந்தாள். வேலன், ஓடத்தைப் பிடித்து இழுத்துக் கட்டிவிட்டு, வீடு நோக்கி பொடி நடை போட்டான்.

தை பிறந்தது; வயல் வரப்புகளில் நெற் கதிர்கள் சாய்ந்து கிடந்தன:

கண்ணம்மாவின் வீட்டு வாசலில், தான் தூக்கி வந்த கரும்புக் கட்டைச் சாய்த்து வைத்துவிட்டு உள்ளே எட்டிப்பார்த்தான் வேலன்;

கண்ணம்மாள் புத்தாடை ஒலி எழுப்ப, கையில் சர்க்கரைப் பொங்கலுடன் வாசலுக்கு வந்துகொண்டிருந்தாள். 'வந்தியா மச்சான்; வா... நானும் உன்னைத் தேடித்தான் வர்ரேன்...ஓ... அப்பா! இங்கே வாயேன்...உன் மாப்பிள்ளை வந்திருக்காரு..."

கதிர்வேலு மீசையை முறுக்கிக் கொண்டே வந்தார்.

'என்ன வேலு...பொங்கல் பொங்கினியா?"

இனிமேல் போய்த்தான் பொங்கணும் மாமா...போன வருஷம் அம்மா இருந்தாங்க...'

'கண்ணம்மா... வேலனுக்கும் சேர்த்து போடு...வேலு இந்த வருஷம் உனக்கு நம்ம வீட்டிலே பொங்கல்...வா...உள்ளே'

'வாசலிலே கரும்புக் கட்டு கொண்டாந்தேன் மாமா!'

'நான் எங்கேப்பா திங்கப் போறேன்...நீயும், கண்ணம்மாவும் தின்னுங்க...'

வேலன் தலை திரும்பி கண்ணம்மாவைப் பார்த்தான்; அவள் தலை குனிந்து புன்னகை செய்துகொண்டிருந்தாள்.

எல்லோரும் ஆனந்தமாகப் பொங்கலைக் கொண்டாடினார்கள்; கதிர்வேலு கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தவர், நன்றாக குறட்டைவிட்டார்; வைக்கோல் போர் அடியில் வேலனும், கண்ணம்மாவும், கரும்புச் சாற்றை உறிஞ்சிக்கொண்டே, அன்புச் சாற்றைப் பிழிந்துகொண்டிருந்தார்கள்;

மாலை வரவே. வேலன் விடைபெற்றான்.

'கன்னிப் பொங்கலுக்கு, மாந்தோப்புக்கு வந்திடு மச்சான்...'

கண்ணம்மா விடை கொடுத்தாள்; மாட்டுப் பொங்கல் கழிந்த மறுநாள் பொழுது விடிந்தது...அந்த மூன்று நாட்களும் வேலன் ஓடத்தை தொடவே இல்லை...தூரத்து உறவுக்காரன் ஒருவனிடம் பொறுப்பை ஒப்படைத்திருந்தான்.

கன்னிப் பொங்கலன்று மாங்குடிக் கிராமமே கலகலப்பாகக் காணப்பட்டது; முக்கியக் காரணம், அந்தக் கிராமத்துக்கு சினிமாக்காரர்கள் வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்கக் கூடாரம் போட்டிருந்தார்கள்: கிராமமே திரண்டு போய் வேடிக்கை பார்த்தவண்ணமிருந்தார்கள்.

மாலை மாந்தோப்பில் கண்ணம்மாவும், வேலனும், வருங்கால நல்வாழ்வின் இன்பங்களை எதிர்நோக்கி பற்பல திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்தார்கள்.

கண்ணம்மா கொண்டு வந்து படைத்த அறுசுவை உணவை, வயிறு நிரம்பச் சாப்பிட்ட வேலன், அன்று கிராமத்திற்கு வந்திருந்த சினிமாக்காரர்களின் வேடிக்கை நிகழ்ச்சிகளையும், விரிவாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

கண்ணம்மா ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

'நாமும் போய் பார்க்கலாம்... வரியா மச்சான்'

'நான், காலையிலேயே பார்த்துட்டேன்'

'இப்போ என்னோட வா...'

'சரி...வா...'

இருவரும் நடந்தார்கள்... அப்போது ஆற்றங்கரை ஓரத்தில் மாலைக் காட்சிகளைப் படமாக்கிக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தை வேலன் விலக்கிவிட, கண்ணம்மா ஆவல் பூக்கும் கண்களால் வேடிக்கை பார்த்தாள்.

விநோதமான காமராக்களையும், பெரிய பெரிய ஒளிவிளக்குகளையும், சாயம் பூசப்பட்டு வியர்வை கோலத்தில் நின்று தவித்துக் கொண்டிருந்த நடிகர் கூட்டத்தையும் மூடாத கண்களால் ஆச்சரியத்தோடு பார்த்தாள். கண்ணம்மா!

கையில் சிகரெட் புகைய, டைரக்டர், பிரதம நடிகைக்குப் பயிற்சியளித்துக்கொண்டிருந்தார். 'இடுப்பில் குடத்துடன், ஒய்யாரமாக நடந்து சென்று ஆற்று நீரில் காலடியெடுத்து வைக்கிறாள் கதாநாயகி! இதோ பாருங்க...மிஸ் சஞ்சலா... அந்தக் காட்சியைத் தத்ரூபமா இப்போ நீங்க நடிக்கணும்...ம்... குடத்தை எடுத்துக்குங்க...'

நடிகை ஒரு முறை நடித்துக் காட்டினாள்; டைரக்டர்கள் மறுமுறையும் நடிக்கச் சொன்னார்... நடிகை முகச் சுளிப்போடு நடித்துக் காண்பித்தாள் அப்போது அங்கே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்த கண்ணம்மா கை கொட்டிச் சிரித்துவிட்டாள்.

'அந்த அம்மாவுக்குக் குடத்தையே இடுப்பிலே வைக்கத் தெரியலை... பார்த்தியா...மச்சான்."

கூடியிருந்தோர் அனைவரும் கண்ணம்மாளையே பார்த்தனர்; டைரக்டரும் பார்த்தார்

கண்ணம்மா வேகமாக நடிகையருகே சென்று குடத்தைத் தூக்கி இடுப்பிலே வைத்துக்கொண்டு ஆற்று நீரில் காலடி வைத்து இறங்கினாள். பலமான கைதட்டலுடன் டைரக்டர் அவளருகே வந்தார்: சினிமாக்காரர்கள் அனைவரும் சூழ்ந்துகொண்டார்கள்; வேலன் முண்டி அடித்துக்கொண்டு கண்ணம்மாவின் அருகே போய் நின்றான்; அப்போதுதான் கண்ணம்மா, தன் தவறை உணர்ந்தாள்; வெட்கம் அவள் முகத்தில் படிய, தலைகுனிந்து கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள்: கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரே ஓட்டமாக வீட்டிற்கு ஓடிவிட்டாள்.

டைரக்டர் வெற்றிப் பிரமாதத்தோடு கதிர்வேலுவின் வீடு நோக்கித் தன் காரைச் செலுத்தக் கட்டளை இட்டார்.

கிராமத்தார் மூக்கின் மேல் விரல் வைத்தார்கள்; வேலன் செய்வதறியாது திகைத்து நின்றான்: மறுநாள் கதிர்வேலுவின் வீடு பூட்டிக் கிடந்தது...

செய்தித் தாள்கள், டைரக்டரின் அரிய சாதனையைப் பாராட்டி,புதுமுக நடிகையை பெரிய அளவில் படமாகப் பிரசுரித்திருந்தன!

வேலன், ஓடத் துடுப்பை கையிலெடுத்து ஓடாக உழைக்கத் தலைப்பட்டான்.

ஆவணி வந்தது; வேலன் பணப் பையை தலைகீழாகக் கொட்டி எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

'தொள்ளாயிரத்து ,தொண்ணுத்தி எட்டு...தொள்ளாயிரத்து தொண்ணுத்தி ஒன்பது...ஆயிரம் ஆயிரம்! ஆயிரம்!! கண்ணம்மா...நான ஆயிரம் சேர்த்திட்டேன் கண்ணம்மா'

வெறி பிடித்தவன்போல் வேலன் கதறினான்; கண்ணம்மா எங்கே இருக்கிறாள்? வேலனின் கைக்கு எட்டாத உயரத்தில் அல்லவா நிலவுத் தாரகையாக மின்னிக் கொண்டிருக்கிறாள்!

மறுநாள் ரயில் ஏறினான் வேலன்; ஏதோ ஒரு நம்பிக்கை அவன் உள்ளத்தில் எழுந்தது; ஓடத்தைத் தூரத்து உறவுக்காரனுக்கு விலை விற்றான்; சென்னைக்குப் பயணமானான்:

ஓடக்கார வேலன், எழும்பூர்ப் புகை வண்டி நிலையத்தில் இறங்கி எங்கே போவது என்று திகைத்து நின்றான்; ரிக்ஷாக்காரர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

— 10-ம் பக்கம் —

# விரட்டப்பட்ட 'மாடு'களும் களையப்பட்ட 'கதிர்'களும்!

தமிழ் நாட்டில் நடைபெற்று முடிந்துவிட்ட நகர சபைத் தேர்தல்கள் அரசியல் அரங்கின் உருவத்தையே மாற்றிக் காட்டியுள்ளன. ஆண்டு பலவாகக் காங்கிரஸ் கட்சியின் பிடியிலேயிருந்த பல நகரசபைகளின் நிர்வாகம் எதிர்க் கட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகர் மன்றங்களில் அமைய வேண்டிய நல்லாட்சி முறையினைக் கட்சி அரசியலுக்கு இரையாக்கும் துரோகம் செய்தவர்கள் இந்த மாநில ஆட்சியைப் பெற்றுள்ள காங்கிரசார்! நகராட்சி மன்றத் தேர்தல்கள் துவங்குவதற்கு முன்னாலே அமைச்சர்களும் அவரைச் சேர்ந்த அடியார்களும் உரத்த குரலில் பேசினார்கள், 'நகராட்சியில் கட்சி ரீதியாகப் போட்டியிடுவதும், அரசியல் சர்ச்சைகளை அங்கே வளர்ப்பதும் எங்களுக்கு உடன்பாடான முறையல்ல' என்று! ஆனால் தேர்தல் காலம் நெருங்கிய நேரத்தில் அமைச்சர்களுடைய குரலிலே புதிய மாற்றங்களைக் காண முடிந்தது! "பொது மக்களே! நகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைக் கைவிட்டுவிடாதீர்கள்" -ஒரு அமைச்சரின் அழுகுரல் இது! "பொது மக்களே நீங்கள் நகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்குத்தான் ஓட்டளிக்க வேண்டும். எதிர்க் கட்சிகளின் நகர சபை அமைக்கப்பட்டால் காங்கிரஸ் சர்க்கார் எந்த உதவியும் செய்யாது"-இன்னொரு அமைச்சரின் அதிகாரக் குரல் இப்படி! "நகர சபைக்குச் சேர வேண்டிய சர்க்கார் உதவித் தொகைகளுக்கெல்லாம் நான் கையெழுத்துப் போடமாட்டேன்" -எதிர்பாரா விதமாக அமைச்சராகிவிட்ட ஒரு அப்பாவிக் காங்கிரஸ்காரரின் ஆணவக் குரல் இந்த மாதிரி! இத்தனை எச்சரிக்கைகளையும் ஒரு பொறுப்புள்ள சர்க்காரிலே இருக்கும் அமைச்சர்கள் தருகிறார்கள்-தங்களைப் பீடமேற்றிய பொது மக்களுக்கு! மக்களாட்சிப் பண்புக்கு அதனுடைய உயர்வுத் தன்மைக்கு இவர்கள் எந்த அளவுக்கு மதிப்பளித்தார்கள் என்பதனை நகராட்சி மன்றத் தேர்தல் கால நிகழ்ச்சிகளைக் கணக்கிட்டவர்கள் எளிதில் உணரலாம். அமைச்சர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அவர்களுடைய அந்தரங்க நட்பிற்குரிய சட்ட சபை உறுப்பினர்கள் தங்களுக்குள்ள அரசியல் அந்தஸ்தையெல்லாம் மறந்துவிட்டு, மட்ட ரகமான வார்த்தைகளைப் பயன்படுத்தியும் பேசினார்கள்! பெண் எம். எல். ஏக்களாம் சிலர் மதுரை வீதிகளிலே தாய்க் குலத்தையே தாழ்த்தினார்கள், தங்கள் பேச்சுக்களால். எனினும் நாடு வழங்கியது நல்ல தீர்ப்பு!

நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி மிகப் பலமான அடிபட்டு வீழ்ந்துவிட்டதை உண்மையான காங்கிரஸ்காரர்கள் தங்கள் கண்ணீரால் தெரிவித்துக்கொண்டுள்ளனர். சென்னை, கோவை, மதுரை, விருதை, சேலம் போன்ற நகரங்களிலே காங்கிரஸ் கட்சி தனது தகுதியைத் தாழ்த்திக் கொண்டுவிட்டது. இந்தப் பெரு நகரங்களிலே கிடைத்த சோகச் செய்திகளை மறக்கவும், மற்றவர் கண்களினின்று மறைக்கவும், காங்கிரஸ்காரர்கள், தமிழ்நாட்டுத் தலைவர், அமைச்சர் பெருமக்கள் பலப்பல சுவையான காரணங்களைக் கண்டுபிடித்துக் கூறித் தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்கிறார்கள்! காங்கிரஸ் கட்சி மிகக் குறுகிய காலத்திலே சரிவுப் பாதை நோக்கி மிக விரைவில் செல்வதைத் தடுக்கவேண்டிய அவசியத்தை ஆராய்ச்சி செய்துகொண்டுள்ளார்கள்! தமிழ்நாட்டு அரசியலிலே, மாற்றுக் கட்சிகளிடையே ஏற்பட முடியாத ஒரு கூட்டணி அமைப்பு முறை நகராட்சித் தேர்தலில், மதுரை நகரத்தில் மட்டும் உருவாகியது. திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயகக் காங்கிரஸ், மக்கள் சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய அமைப்புக்களின் அபேட்சகர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிடாமல் பொது எதிரியாக, தேர்தல் போர்க்களத்திலே சந்தித்த காங்கிரஸ் கட்சியை முறியடிக்க எண்ணினர். அதன்படியே நல்ல பலனும் பெற்றனர். இங்கே அரசியல் கொள்கை ஒன்றுபடாமல் நகரசபைத் தேர்தல் நிலவரத்தில் ஒப்பந்தங்கள் ஏற்பட்டதால் மும்முனைப் போட்டிகள் தவிர்க்கப்பட்டன. தனித்தனி பிரச்சார முறைகள் ஒருமுகமாக இணைக்கப்பட்டது, சென்னை மந்திரிகள் அத்தனை பேர்களும் மதுரையில் முகாமிட்ட பிறகுதான்! தேர்தலுக்கு முன்னைய ஏழு நாட்கள் மதுரையை அதிரச் செய்ததுபோலவே நகர சபைத் தேர்தல் முடிவுகள் மந்திரிகளையும் மயக்கமுறச் செய்தன! பல காலமாகக் காங்கிரசின் உறைவிடமாகத் திகழும் மதுரை, அதன் நிர்வாகப் பொறுப்பை எதிர்க்கட்சியினிடத்திலே ஒப்படைக்கும் நிலையை எண்ணி மகிழ்ந்தவர்களைக் காட்டிலும் வியப்படைந்தவர்களே ஏராளம்! நகரசபையில் 36 இடங்களைப்பெறத் துணிந்த காங்கிரஸ் 9 இடங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது என்றால் தன்னுடைய மூன்று பகுதி செல்வாக்கை இழந்துவிட்டதாகத்தானே பொருள் கொள்ளமுடியும்! உயரப் பறந்த தாயின் மணிக்கொடி, பல ஆண்டுகளுக்குப் பிறகு தாழப் பறக்கவேண்டிய அவசியத்தை உருவாக்கியது மதுரை மக்கள் வழங்கிய நல்ல தீர்ப்பு!

நகர சபைத் தேர்தல்களில் ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியினர் மதுரை தவிர்த்த மற்ற இடங்களிலே பாராட்டத்தக்க வெற்றிகளைப் பெற முடியவில்லை. சென்னையில் இவர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையைத் தரும் ஒரு இடம்கூட பெறாதது பெரிதும் வருந்தத்தக்கதாகும்! இந்திய தேசீய ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியை மதுரை அளவில் செயல்படுகிற அமைப்பாக்கிவிட்டார்கள். காரணம் என்ன? பூர்வாங்க மாநாடு கூட்டப்பட்ட நேரத்திலே இருந்த வேகம் ஏனோ இப்போது தளர்ந்துவிட்டது! முன்னேற்றக் கட்சி, காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியை இப்போதெல்லாம் ஏனோ அதிகமாகத் தழுவி நிற்பதில்லை. இரண்டும் ஒன்றே என்று சில தலைவர்கள் சொன்னார்கள். "ஜனநாயக காங்கிரசின் தந்தை முத்துராமலிங்கனார்தான்; அவரிடததிலே கட்சியை ஒப்படைத்துவிடுகிறேன்" என்றார் வெங்கிடகிருட்டிணர்! ஆனால் முதுகுளத்தூர் வீரர் அந்த அளவுக்குச் செயல்படத் தயாராகவில்லை. சோஷலிஸ்டுகளும், பிரஜா சோஷலிஸ்ட்களும், நகர சபைத் தேர்தல்களில் கலந்துகொண்டாலும் களிப்புச் சிந்து பாடமுடியவில்லை. கம்யூனிஸ்ட்கள் கோவையிலே தனித்து நின்று வெற்றி பெற்றனர், மதுரையிலே கூட்டணியின்-எல்லாக் கட்சியினரின் ஆதரவுடன் நல்ல பலன் கண்டனர்! அவர்களின் அளவுக்கு மீறிய பாட்டுப் பேச்சுக்கும், வீண் விளம்பரத்திற்கும், சேலம், தூத்துக்குடி, தஞ்சாவூர், சென்னை ஆகிய நகர சபைகள் புதிய பாடங்கள் புகட்டியுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம் நகர சபைத் தேர்தல்களில் முதன்முறையாகப் பங்கேற்று நல்ல பலன் பெற்றுள்ளது! மதுரையைத் தவிர்த்த மற்ற இடங்களிலே மாற்றுக் கட்சிகளின் மட்ட ரகமான எதிர்ப்புகளைச் சந்தித்து முறியடித்துள்ளது. சேலமும் தூத்துக்குடியும், தஞ்சையும் விருதையும் கழகத்தின் கடுமையான உழைப்பிற்குக் கிடைத்த பரிசுகள். தனிப்பட்ட சுயேச்சையாளர்கள் கழகத்தை எதிர்ப்பதற்காகவே தயாரிக்கப்பட்டார்கள். அவர்களிலே பொதுமக்களின் கூர்ந்த பார்வையினின்றும் ஒதுக்கித் தள்ளப்பட்டவர்தான் ஏராளம். திராவிடர் கழகத் தோழர்கள் இடையிலே நின்று வழி மறைத்தாலும் பெரும் தடையாக நிற்க முடியவில்லை! எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் சிங்காரச் சென்னைத் திருநகரிலே இந்தியத் துணைக் கண்டத்துப் பல்வேறுபட்ட அரசியல் இயக்கத்தினர் மிகவும் உன்னிப்பாக கவனிக்கும் மிகப் பெரும் வெற்றி பெற்றது! அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அறிக்கை அனுப்புகிறது. அதன் தலைவி அலகாபாத் நேருவின் அருமை இந்திராதேவி ஆராய்ச்சி செய்கிறார். இந்துவும், மெயிலும், எக்ஸ்பிரஸும், தினமணியும், விகடனும் வேறுபல எதிர் முகாமைச் சேர்ந்த ஏடுகளும் முன்னேற்றக் கழகத்தின் வெற்றியைப் பாராட்டுகின்றன. ஆய்வுரைகளைத் தருகின்றன! ஆனால் எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்றுவிட்ட மற்றக் கட்சியினர் உள்ளம் திறந்து பேச வெட்கப்படுகிறார்கள். சென்னையில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது. கழகத்தைப் பாராட்ட வேண்டிய ஜனநாயகக் காங்கிரசின் ஆதரவுப் பத்திரிகையான மதுரைக் "கண்ணகி" ஆயாசப்பட்டு, "அய்யோ, தலைநகரில் காங்கிரஸ் தரைமட்டமாகிவிட்டதே; தமிழ்நாடு காங்கிரஸ் ஆபீசை இழுத்துப் பூட்டுங்கள்" என்றெழுதுகிறது! எதிர்க் கட்சிகளின் வளர்ச்சியை வரவேற்கும் பார்லிமெண்டரி முறையைப் பற்றி உரக்கப் பேசுகின்ற கம்யூனிஸ்ட்கள் சென்னையில் கழகம் பெற்ற வெற்றியை இன்றுவரையிலும் நல் இதயத்துடன் பாராட்டவில்லை. பாராட்ட வேண்டாம். தங்கள் முடிவான கருத்துரையைக் கூறியிருக்கலாம்! எவர் எவருக்கோ எடுபிடியாக இருந்த தமிழரசுக் கழகம் சென்னையில் முக்காடு போட்டுக்கொள்ள வேண்டிய நிலை அதன் தலைவர் சிவஞானத்தின் ஆவேசமான அழுகுரலில் தெரிந்துகொள்ளலாம்! கழகத்தின் வெற்றி தேசீய சக்திகளுக்கெல்லாம் அறைகூவலாகிவிட்டதாம் எல்லோரையும் அழைக்கிறார். ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள் முன்னேற்றக் கழகமெனும் 'தீயசக்தியை' ஒழிக்க என்று இரவுராணிகள் நடையிலே போவோர் வருவோரிடத்திலேயெல்லாம் பேசிக் காட்டுகிறார்! இவரைப் போன்ற அரசியல் விதவைகள் பனிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பும் சரியான பாடம் பெற்றுக்கொள்ளவில்லையென்றால் இந்தக் கூட்டத்தின் திட்டம்தான் என்னவோ? திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிச் சிறப்பை இந்தியத் துணைக்கண்டத்துப் பல பகுதிகளிலே எதிரொலிக்கும் செய்திகளிலேயிருந்து உணரலாம்! சென்னை நகரத்து மேயர் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடமாட்டேன் என்று ஓடிவிட்டது. கழகம் பெற்ற வெற்றியைக் கண்ணியத்துடன் ஒப்புக்கொள்ளாதவர்கள் இரவல்களைத்தேடி அலைந்தார்கள். இறுதியில் வெட்கித் தலை குனிந்திருக்கிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழகத்து நகராட்சி மன்றத் தேர்தல்களில் கிடைத்துள்ள பாராட்டத்தக்க வெற்றிகள் வருங்காலப் பொதுத் தேர்தல்களிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்தப் பேருண்மையை எடுத்துக்காட்டுவதுதான் தமிழகம் வழங்கியுள்ள நல்ல தீர்ப்பு!

-கூடலரசன்

## நாடு வழங்கிய நல்ல தீர்ப்பு !

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 5 | 9—5—59 | இதழ் 47

## நல்வரவு, நல்வரவு!

வருக! வருக! வருக!

பொன்னொளிக்கற்றைகளை வாரி இறைக்கும் இளஞாயிறே, வருக! வருக!

புதுமைச் சேதியை முழக்கி வானில் எழுங்கதிரே, வாழ்க! வாழ்க!

"ஆழிசூழ் உலகெல்லாம் வாழி! வாழி!" என எழுச்சிப்பள்ளுப் பாடும் ஆதவனே வாழி! வாழி!

"புதியதோர் உலகு செய்வோம், அதில் பல்கியதோர் வளமும் காண்போம்!" எனப் புரட்சிக் கீதம் இசைக்கும் ஒளிப்பந்தே! எழுக! எழுக!

திராவிடர் வாழ்வில் ஒரு திருப்புமுனையைக் காட்டிய கழகத்துச் செல்வனே! கண்ணியத்தின் அரசனே! வருக! வாழ்க! வளர்க!

திக்கெங்கினும் திராவிடர் கிளப்பிடும் வாழ்த்தொலிகளுடன் தென்றலின் வாழ்த்துக்களையும் சேர்க்கிறோம்.

நாட்டுமக்களிடை நாம் பெற்றுள்ள வளர்ச்சியைக் காட்டும் காலக் கண்ணுடியாய், அரசியல் எதிரொலியாய், காலத்து அறுவடையாய், சென்னை நகரம் கழகத்துக்குப் பொன்னாரம் பூட்டிய காட்சியைக் காண்கிறோம்.

ஆண்டாண்டு காலமாய்-பிறந்தநாள் முதலாய் நாம் துன்பங்களுடேயே வளர்ந்திருக்கிறோம்.

சுடுசொல்லும் கடுமொழியுமே நம்மைக் கொத்தின. பழிக்கணையும் நையாண்டித் தொல்லையுமே நம்மைக் குத்தின. வஞ்சமும் சூழ்ச்சியுமே நம்மை வாட்டின!

என்றாலும் அஞ்சாது அயராது மக்களிடம் சொன்னோம், நம் கருத்துக்களை. அவர்கள் சிந்தனைக்குத் தந்தோம், நம் திட்டங்களை. தொடக்கத்தில் கசப்பு மருந்தாய் எண்ணிய கொள்கைகளை இன்று ஏற்கத் தொடங்கி விட்டனர். இக்கொள்கைகள்தாம் தம் வாழ்வில் நலம் சேர்க்கும் இனிய மருந்துகள் என்பதை அறிந்து ஏற்றிப்போற்றி கொண்டாடுகின்றனர் மக்கள். அந்த அன்பின் சின்னமாகச் சென்னையில் நம் மேயர் பதவியேற்றிருக்கிறார். எண்ணரிய இடையூறுகளைத் தந்து தி. மு. க. மேயர் ஆள்வதைத் தடுக்க முனைந்தனர் "தேசிய பிதாக்கள்"! காலம்போன காலத்தில், காதறுந்த ஊசி காமராசர் விற்க முயன்றும் பயனில்லை. கழகம் தடைகளை உடைத்து கடமையை ஏற்றிருக்கிறது. புதிய வரலாற்றின் தலை மகனாகியிருக்கிறார் நம் அரசு!

அவர் முன்னே நிற்கும் பொறுப்புகளும் பிரச்னைகளும் பல. ஆனாலும் அனுபவப்பட்ட அவருக்கு அவை பெரிதன்று. பதவியேற்றதும் அவர் மேற்கண்ட நடவடிக்கைகளே அதற்குச் சான்று. மே முதல் நாளன்று சேரிகள் பலவற்றிற்குச் சென்று உள்ள குறைகளை அறிந்து செய்யவேண்டிய சீர்திருத்தங்களுக்கான பணிகளை மேற்கொண்டுள்ளார். அடுத்து தமிழுக்குத் தீங்கிழைக்கும் "ஆகாஷ்வாணி"யார் அவரை அழைத்தனர் பேசுவதற்கு. தன் பொன்னான நேரத்தைத் தீயோரின் பாழ் வழிகளுக்கு ஒப்படைக்க மறுத்துவிட்டார். இத்தொடக்க நிகழ்ச்சிகளே, தோழர் அரசுவின் பொறுப்புக்கும் உணர்வுக்கும் சான்று காட்டப் போதும். இப்படிப் பல தொண்டுகளால், சென்னை மேலும் சிறக்குமென்பது மெத்த உறுதி.

மேயர் தேர்தலில் பொதுவுடைமையர் ஒத்துழைத்ததை மறந்துவிட முடியாது. கோவையில் தி. மு. கழகத்து உறுப்பினரும் சட்டக் கல்லூரி மாணவரும் மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக்குழு உறுப்பினரும் ஆன நம் தோழர் ஆறுமுகம் துணைத் தலைவராவதற்கு ஒத்துழைத்திருக்கின்றனர். அதேபோல் சென்னையில் பலர் பல சொல்லியும் தம் கடமையைச் செய்திருக்கின்றனர். நகரத்தின் நலனைப் பேணியதற்கு மெத்த நன்றி!

துணைத் தலைவராக சென்னைமாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துங்கம்பாக்கம் சிவசங்கரன் அவர்களும் தூய தொண்டர்; அயரா உழைப்பாளி. அவருக்கும் நம் நல்வரவு உரித்தாகுக.

புதிய வரலாற்றைப் படைக்கப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கும் கழகத்துச் செல்வங்களே! அல்லும் பகலும் உழைத்து தலைநகரத்து மதிப்பையும் சிறப்பையும் உயர்த்திவிடுவீர் என்ற மேலான நம்பிக்கை எமக்குண்டு. அந்த நம்பிக்கை வெற்றி பெற உழைக்கும் உங்களை வாழ்த்துகிறோம்; வாழ்க! வாழ்க! போற்றுகிறோம்; புகழுறுக! பொலிவுறுக! ஏற்றுகிறோம்; எழிலுறுக; சிறப்புறுக! ★

## கண்ணதாசன் கவிதைகள்

### (மலாயா ஏட்டின் மதிப்புரை)

"இன்பத்துட் பேரின்பம் கவியின்பம்" என்பர் கற்றறிந்தோர் அது உண்மையென இலங்குகிறது-கவிதையைச் சுவைக்குங் காலை.

பல ரகப்பட்ட கவிதைகளும் இரு குறுங்காவியங்களும் நிறைந்துள்ள ஒரு கவிதைத் தொகுப்பே 'கண்ணதாசன் கவிதைக'ளாகும்.

'கண்ணதாசன் கவிதைகள்' தொகுப்பில் இடம் பெற்றுள்ள 'மாங்கனி' என்ற காவியம், முன்னமே ஒரு தனி நூலாக வெளி வந்து தமிழ்மக்களின் ஆதரவைப் பலமாகப் பெற்றிருக்கிறது மற்றொரு காவியமான 'ஆட்டனத்தி ஆதிமந்தி', 'முல்லை' என்ற. இலக்கிய மாத இதழிலே தொடர்ச்சியாக வெளிவந்தது. இவ்விரு காவியங்களும் மிக அருமையாகப் புனையப்பட்டிருக்கிறது, கவிஞர் கண்ணதாசனால்.

'பழம் பாடல் புதுக்கவிதை' என்ற முதற் பகுதியில் நள வெண்பா, முத்தொள்ளாயிரம், நற்றிணை போன்ற பழந் தமிழிலக்கியப் பாடல்களில் ஒன்றிரண்டை வைத்து இற்றைநாள் முறையில்-தெள்ளிய நடையில்-தீஞ்சுவைக் கருத்தோடு கவியாத்திருப்பது, கவிஞர் தம் திறமைக்கோர் எடுத்துக்காட்டு.

'வாழ்க்கையும் வனப்பும்' என்ற இரண்டாம் பகுதியில், 'கணவன் ஒரு தொல்லை' என்ற தலைப்பின்கீழ்—

"ஆயிரம்பேர் முன்னிலையில் கணவன் மார்பில்
அன்போடு சேர்ந்தேஓர் முத்தம் தந்தால்
நாயிவள்என் றுரைப்பார்கள்! நலங்க னிந்த
நவினமலர் மகவுக்கோர் முத்தந் தந்தால்
தாயரெலாம் துடிப்பார்கள்! தாமும் வாங்கித்
தம்மார்பில் அணைப்பார்கள் கொஞ்சு வார்கள்!
சேய்பெரிதா? மணவாளன் பெரிதா? ஐயா!
சிந்தனைசெய்! முதற்பெருமை யார்க்கு ரைப்பீர்!

—என்று பாடியிருக்கிறார், கவிஞர்.

ஒரு பெண்ணிற்குக் கணவனைவிடக் குழந்தைதான் பெரிது என விளக்கும் இன்னுஞ் சில விருத்தங்கள் இப்பகுதியில் வெகு அழகான நடையில் நயமாகத் தீட்டப்பெற்றிருக்கின்றன.

'பிரிவும் பரிவும்' என்ற நான்காவது பகுதியில் 'கலைவாணன்'—'அருவி ஓய்ந்தது'—'அம்பேத்கார்'—'வள்ளல் அழகப்பா'—'ஆறுது ஆறுது அழுதாலும் தீராது'—'டாக்டர் நாயுடு'—'விடுதலை வீரன் நாகி' என்ற தலைப்புகளில் பல மேதையர் மறைவு குறித்துப் பாடிய பாக்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாக்களை வாய்விட்டுப் படிக்குங் காலை, கேட்பவர் விழிகள் நீர்கொட்டுமென்பதில் எள்ளளவும் ஐயம் கிடையாது.

'குறியும் கொள்கையும்' என்ற நான்காவது பகுதியில் 'தமிழா! தமிழா!' என்ற அறுசீர் விருத்தம் தலைசிறந்தது. இக்கவிதையில் கவிஞர் கண்ணதாசன், தமது இயற்பெயராகிய 'முத்'தை வைத்து, கனவில் பண்டைத்தமிழ்ப் பெரியார்களையும் பாராட்டிகளையும் கண்டு, கருத்தியவதாகக் காட்டுகிறார் சந்தம் மிளிரும் இக்கவிதை வெகு நன்று எனலாம்-தயக்கமின்றி.

'இசையும் பாட்டும்' என்பது ஆறுவது பகுதி. இதில் கவிஞரவர்களால் தீட்டப்பெற்று, வெண்திரைகளில் படத்தினூடே ஒலித்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 'தென்னாடே! திராவிடப் பொன்னாடே!' என்ற பாடல் 'மாலையிட்ட மங்கை'யைப் பார்த்தவர் மனதில் நிற்குமென்பது உண்மை. அப்பாடலும் இப்பகுதியில் இருக்கிறது.

'பல்சுவை' என்பது எட்டாம் பகுதியாகும். இதில் 'நமக்கொரு திருநாள்' என்ற திராவிட விடுதலைக் கவியும், 'அழகி' என்ற அற்புதப் பாவும், 'உறுதி'யென்ற எழுசீர் விருத்தமும் இடம் பெற்றுள்ளதோடு சென்ற ஆண்டு மதுரை மாநகரில் பல கவிஞர்கள் கலந்துகொள்ளக் கவியரங்கத்திற்குத் தலைமை வகித்த கண்ணதாசனின் கவியரங்க முன்னுரைப் பாவும், 'தென்றல்' பொங்கல் மலரில் வெளிவந்த 'கிழவன் சேதுபதி' என்ற பெருங் கவிதையும் சிறப்பாக இடம்பெற்று நூலை அலங்கரிக்கின்றன.

'முதல் பாட்டு' என்ற எட்டாம் பகுதியில், கவிஞர் கண்ணதாசனின் கைவண்ணத்தால் உருவான முதற் கவிதை ஜொலிக்கிறது.

கவிஞர் கண்ணதாசனால் புனையப்பெற்று, திரு. நாகமுத்தையாவால் தொகுக்கப்பெற்று, காவியக் கழக உரிமையாளர் திரு. கண்ணப்பாவள்ளியப்பனால் வெளியிடப்பெற்ற 'கண்ணதாசன் கவிதைகள்,' 'தமிழுக்கு இனிமை என்ற பொருள்' என்பதை மெய்ப்பிக்கின்றன. இந்நூலைத் தொட்டால் எடுக்கச் சொல்லும்; எடுத்தால் நெடுகப் படித்து முடிக்கச் சொல்லும்.

—முரு. சொ. நாச்சியப்பன்

★

(மலாயா ஏடான "தமிழ் நேச"னில் 26-4-59 அன்று தீட்டப்பெற்ற மதிப்புரை இது.)

# ★ சிவகெங்கைச் சீமை — ஆடும் அழகு! ★



கருத்து மொழிகளுக்கு விளக்கம்தரும் கூத்தழகி! ஆடற் கலையின் அற்புதப் படைப்பு! வண்ணப் பூங்கொத்தின் உயிர்ப்பு! உள்ளம் மகிழ, விழி சுழல இவர் ஆடுங்காட்சியை, கண்ணதாசன் புரடக்ஷன்சார் தயாரித்த சிவகெங்கைச் சீமையில் காணலாம்!



அன்றலர்ந்த பூங்கொடி! அழகு வானத்து முழுமதி! விழியும் விரலும் கதை சொல்லவைக்கும் விறலி! அவள் உள்ளம் அலைமோதி ஆடுகிறது. எண்ணம் நிலைகுலைந்தாடுகிறது. மறத்தி மகள் மரணக்கூத்தாடுகிருள்! ஏன்? பொய்கைக் கமலம் பொங்கி எழுந்தாடுவதேன்? மேயில் வரும் சிவகெங்கைச் சீமை விடை சொல்லும்.



வனப்பில் விளையாடும் அன்னம்; வாழ்வில் ஒளிரும் தங்கம்; பொன்னவிர்மேனி வெண்திங்கள்! உடன்பிறந்தாளுடன் இப்படி உவகைக் கூத்தாடும் கோல நிலையை திரு வடு லெ. சுப்பையா அவர்கள் அளிக்கும், மறக்குலப் பெருமை சொல்லும் சிவகெங்கைச் சீமையில் பார்க்கலாம்!

## திருமண அழைப்பு

பேரன்புடையீர் !

நாளது 10—5—'59 காலை 9 மணியளவில், கடலூர், எமது இல்லத்தில் எனது மகள் மாதரிக்கும் திரு கலியமூர்த்திக்கும் முதுபெரும் புலவர் திரு. மயிலை. சிவமுத்து தலைமையில் நடக்கும் மணவிழாவிற்கு வந்து வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

சேலியமேடு,
கடலூர்,
2-5-'59.

அன்புள்ள,
**வாணிதாசன்.**

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

அனுப்புங்கள், நடுத்தெருவிலே நின்றொருவர் வயிறெரிந்து கத்துவதாக.

மேலும் ஆராய்ந்து பார்க்கையில், பல விந்தையான உண்மைகள் வெளிப்படுகின்றன. ஐக்கிய முன்னணி என்றும் எதிர்க்கட்சிகளின் கூட்டணி என்றும் தேர்தலுக்குமுன் அவர் உதவியைக் கோரினோர் இப்போது காலை வாரிவிட்டுவிட்டனராம்! "ஐக்கிய முன்னணிக்குத் தரப்படும் மதிப்பு இதுதானா?" என்று அங்கலாய்க்கிறார். இவரைக் கேட்கிறோம்: "அரசியல் - விமரிசனம் செய்யப் புறப்பட்ட அசகாய சூரரே! அலகாபாத் காதலன் மடலுக்காக எதையும் துறக்கும் அருங்குணாளரே! மதுரையில் உங்கள் தோழர்கள் கூட்டணிக்கு என்ன மதிப்புக்கொடுத்தனர்? கழகம், பொதுவுடைமை இயக்கம், ஜனநாயகக் காங்கிரஸ், பி. சோ. ஆகியன காங்கிரசை வீழ்த்தக் கூட்டுச் சேர்ந்தன. இந்த நல்ல நோக்கின்படி எங்கெங்கே யார் யாருக்கு வாய்ப்பு உண்டோ அந்த இடங்கள் விட்டுக் கொடுக்கப்பட்டன அவரவர்க்கு. மதுரை, 8-வது வட்டத்தில் தி. மு. க. அபேட்சகர் தோழர் இராமானுசம் நின்றார்.

தமிரசுக் கழகத்தவர் காங்கிரஸ் ஆதிக்கத்தை உண்மையிலேயே வெறுப்போரானால், அங்கே கூட்டணியில் கலந்திருக்கவேண்டும். அல்லது கூட்டணியின் ஆதரவு பெற்ற கழகத்தவர்க்கு ஆதரவு காட்டியிருக்க வேண்டும். அல்லது பேசாமலாவது இருந்திருக்க வேண்டும். மாறாகத் தமிழரசுக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் சுயேச்சையாகப் போட்டியிட்டு, காங்கிரஸ் வெல்வதற்கு வாய்ப்புண்டாக்கித் தந்துவிட்டார். தமிழரசுக் கழகத் தோழர் பெற்ற சுமார் 200 வாக்குகளும் காங்கிரசிற்கு எதிர்ப்பாகக் கிடைத்திருந்தால் கழகம் அங்கே வென்றிருக்கும். இதை அறியாதவரா ம. பொ. சி.?—ஆக இவற்றை எல்லாம் எண்ணுகையில், ம. பொ. சி. சினந்த காரணம் இதுவாகத்தான் இருக்கமுடியும்.

"நமது பரம்பரை எதிரியான தி. மு. க. சென்னை நகரை ஆள்கிறதே! அதற்கு வழியை உண்டாக்கியோர் பொதுவுடைமையார் தாமே?" என்ற தப்பான கணக்கிட்டதனால்தான் தாவிக் குதிக்கிறார்; வேறொன்றுமில்லை.

காங்கிரஸ் கையில் கார்ப்பரேஷன் நிர்வாகம் சிக்கிவிடக்கூடாது என்ற நோக்குடன்தான் கம்யூனிஸ்ட்கள் உதவியதாகச் சொல்வதை நம்ப மறுப்பதாக எழுதுகிறார் ம. பொ. சி..

"காங்கிரஸ்தான் கட்சி சார்பில் மேயர் பதவிக்கு யாரையும் நிறுத்துவதாக அன்றும் இல்லையே; இன்றும் இல்லையே! பின் ஏன் காங்கிரசை எதிர்க்க வேண்டும்?" என்கிறார். வேங்கடத்தை வேட்டிக்குள் மறைக்க நினைக்கும் வெங்காய வீரரே! "சுயேச்சை யாரும் மேயர் பதவிக்குப் போட்டியிட்டால் தம் வாக்குகளைக் காங்கிரசார் தருவர்!" என்று திருமங்கலத்தாரும், ஒரு வழியில் உங்களுடன் பிறந்தாரும் ஆன இராசாராமர் கூறியதை மறந்தீரோ? அதை நப்பாசை பிடித்த பல சுயேச்சைகள் ஒத்துக்கொண்டதையும் அறியீரோ? அறிந்தும் ஏன் இப்படி அடிக்கடி வழுக்கி விழுகின்றீர்?

செங்கோல் இப்படிச் சிந்திய மொழிகளைக் கண்டு ஜனசக்தியும் மறுப்பு எழுதியிருக்கிறது. தவறான ஓர் எண்ணம் கிளப்பப்படும்போது, அதை மறுப்பது தொடர்புடையோர் கடமைதான். தோழர் சிந்தன் அவர்கள் ஜனசக்தி 4-5-59 இதழின் மூலம் செங்கோலுக்குப் பதில் எழுதுகையில், "தி. மு. க. தனி திராவிட நாடு வேண்டுமென்ற கொள்கையை கைவிடுமானால் அந்த நிலைமையில் காங்கிரஸை எதிர்த்துப் போராட ராஜ்யம் முழுவதிலும் தி. மு. க.வுடன் ஐக்கிய முன்னணி அமைத்துக் கொள்ளக் கம்யூனிஸ்டுகளுக்கு ஆட்சேபமே இல்லை" என்று எழுதுகிறார் அவர் தான் எடுத்துக்கொண்ட பிரச்னையிலிருந்து தவறுகிறார். மற்றும் சென்னை மக்கள் திராவிட நாடுப் பிரிவினைக் கொள்கைக்காக வாக்களிக்கவில்லை என்றும் எழுதுகிறார்.

ஆட வேண்டிய அரங்கமும், சூட வேண்டிய மலரும் எவை எவை என்று அறியாதவன் மடையனாகத்தான்-அரசியல் பிரச்னைகள் விளங்காத ம. பொ. சி.யாகத்தான் இருக்க முடியும். ம. பொ. சி. அவர்களும் இந்தக் கொள்கைபற்றி ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார். திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை, தி. மு. கழகம் என்றும் வற்புறுத்தத் தவறியதில்லை. சட்ட சபை, பாராளும் மன்றத் தேர்தல்களில் நின்றது; அவற்றில் தான் திராவிடப் பிரிவினைக்கான திட்டங்களை வகுக்க முடியும் என்பதால், தனது விடுதலைக் கொள்கையின் பேரில் அத்தேர்தல்களில் நின்றது. நகர மக்களின் நீர், விளக்கு, பாதை, சுகாதாரம், கல்வி முதலிய வசதிகளை - நலன்களைப் பெருக்குவதுதான் நகராட்சிகளின் கடன். இந்த வளங்களைப் பெருக்குவதற்காகப் பாடுபடும் நகராட்சித் தேர்தல்களில் தி. மு. க. எப்படி, விடுதலைக் கொள்கையை வைத்துப் போட்டியிட முடியும்? இல்லை- பொதுவுடைமையர் இத்தேர்தல்களில் தொழிலாளர் அரசு ஏற்படுத்தும் திட்டத்துடன்தானா போட்டியிட்டனர். கிடையாதே! வெளிப்படையாகச் சென்னை மாவட்ட தி. மு. க. சொன்னதே, நகரின் வளத்தை—அழகைப் பெருக்கத்தான், தான் போட்டியிடுவதாக. மற்றொன்றையும் மறந்துவிடக்கூடாது. கழகத்திற்கு வாக்களித்தோர் அனைவரும், கழகத்தின் மூச்சு நாட்டு விடுதலைதான் என்பதை அறியாதோர் அல்லர். தி. மு. க. நகரை வளர்க்கும் என்பதோடு அதன் விடுதலை தாகத்தையும் அறிந்துதான் வாக்களித்தனர்.

சிந்தன் இத்தகைய கழகம் தன் உயிர்க் கொள்கையை விட்டுவிட்டு வர அவாவுகிறார்.

கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கச் சொல்கிறார்!

"உயிரை விட்டு விட்டால் திருமணம் செய்துகொள்வேன்" என்கிறார்!

சித்திரம் வாங்குவதே விழிகளுக்கு விருந்து தரத்தான் என்பதை மறந்தாரா? திருமணம் செய்து கொள்தலே இன்ப வாழ்க்கை காண்பதற்குத்தான் என்பதை அறியாரா? தி. மு. க. வாழ்வதே தன் விடுதலைக் கொள்கை மேல் தான் என்பதைத் தெரியாரா? தெரிந்த பின்னரும் வினவிடுப்பதன் பொருள் என்ன? கொள்கை வழி உடன்பாடு இன்றியே 45 இடங்களை தி மு. க. பெற்றதை அவர் அறியாரா? பின்னும் ஏன் இந்தப் பேதைமை!

வழித் துணையாகச் சற்றே அழைத்தால், "வாழ்க்கைத் துணையும் ஆகிறேன், நீங்கள் உங்கள் உயிரைத் துறந்துவிடின்!" என்பவளை என்ன நினைப்பீர்?

சிந்தனை நாம் அழைத்ததும், அவர் கோவையில் நம்மை அழைத்ததும் நகர மக்கள் நல அடிப்படையிலேயே இருக்கட்டும்; இதயக் கொள்கைகளின் அடிப்படையில் அந்தக் கூட்டு அமையும் என்று கருத வேண்டாம்.

சிந்தன் அவர்களே! நமது ஒப்பந்தத்தின் கடைசிப் பகுதியைச் சிதறாமல் காக்க நாம் இருவரும் கடமைப்பட்டுள்ளோம். எம்முடைய ஒத்துழைப்பு நீடிக்க விரும்பினால் நம்முடைய கொள்கைப் பிரச்னைகளை இணைக்க வேண்டாம்!

சிவஞானம் அவர்களே! கூந்தல் உள்ள சீமாட்டி வாரி முடிக்கிறாள். அதைக் கண்டு பொறுது நீங்கள் உங்கள் தலையைக் குழவியால் இடித்துக்கொள்ளாதீர்கள்! திராவிட முன்னேற்றக் கழகம் வளர்கின்ற இயக்கம். பாலைவனத்து வாசியான நீங்கள், அதைப் பார்த்து ஏங்க வேண்டாம்!

**—மா. பாண்டியன்**

## சதகப் போட்டி—ஓர் அறிவிப்பு.

தென்றல் நண்பர்களே, சதகப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ள அழைத்திருந்தோம். தோழர்கள் பலரும் எழுதியிருந்தனர், பல பாடல்களை. ஆனால் அவை சதகத்திற்குரிய இலக்கணங்களோடு அமையவில்லை. கீழே குமரேச சதகத்திலிருந்து எடுத்த ஒரு பாடலைத் தந்திருக்கிறோம். ஆழ்ந்து படித்தால் சதகத்தின் இலக்கணம் தெரியும். இதனை முன்மாதிரியாகக் கொண்டு மறுபடியும் எழுதுக. நண்பர்களின் ஆர்வம் போதிய அளவு வளரவில்லையானால், மறுபடியும் வெண்பாப்போட்டி அல்லது விருத்தப்போட்டியைத்தான் தொடங்கவேண்டி வரும். (ஆ-ர்.)

**சந்தன விருட்சத்தை அண்டிநிற் கின்றபல**
**தருவும்அவ் வாசனை தரும்**
**தங்கமக மேருவை அடுத்திடும் காக்கையும்**
**சாயல்பொன் மயமே தரும்**
**பந்தமிகு பாலுடன்வ ளாவியத ணீரெலாம்**
**பால்போல் நிறங்கொடுக் கும்**
**படிகமணி கட்குளே நிற்கின்ற வடமும்அப்**
**படியே குணங்கொடுக் கும்**
**அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடில்**
**அடுத்ததும் பசுமையா கும்**
**ஆனபெரி யோர்களொடு சகவாசம் அதுசெயின்**
**அவர்கள்குணம் வருமென்பர் காண்**
**மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தஅரி**
**மருகமெய்ஞ் ஞானமுரு கா**
**மயிலேறி விளையாடும் குகனேபுல் வயல்நீடு**
**மலைமேவு குமரேச னே.**

—குமரேசசதகம்.

முகவரி மாற்றம் :

**கோ. இளவரசு,**
நகராண்மைக் கழக உறுப்பினர்.
53, அம்மையப்ப முதலி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-14.

• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்

# ஏழு என்னும் எண்ணுப்பெயர் உயிரீறே!

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பினர் என்பவர் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னே தமிழகத்தில் வாழ்ந்த ஒரு ஒப்பற்ற இலக்கணப் பேராசிரியர். 'எழுத்து–சொல்–பொருள்'' என்ற முப்பிரிவுகளில் முத்தமிழைச் செழிக்க வைத்தவர். உலக இலக்கிய இலக்கணங்கள் கண்டிராத பொருளதிகாரத்தின் புதுமைகளை விளக்கிய புத்துலகக் கலைஞர்.

இவர் காலத்து வழக்கிருந்த சொற்கள் சில, இடைக்காலத்து வழக்கிழந்தன. வேறுசில சொற்கள் திரிந்து வழங்கின. இன்னுஞ் சில சொற்கள்; அவைகளின் தன்மையிற் திரிந்து மாறுபட்டன. இவர் காலத்து இல்லாத சொற்கள் எத்தனையோ யாக்கப்பட்டன. வேற்றுமொழிச் சொற்களும் வேரூன்றி நிலை நிறுத்தப்பட்டன. காலத்தின் கோலத்தால் இன்று எத்தனை மாற்றங்களைக் காண்கிறோம்? இத்தன்மையை உடையதா? அல்லது அத்தன்மையைக் கொண்டதா? என்று மயங்கும் நிலையில் உள்ள சொற்களும்ஏராளம். இவற்றைப் பற்றி நாம் ஒரு முடிவுக்கு வருவது இன்றியமையாததாகும்.

தொல்காப்பியர் காலத்தில் ஏழென்னுமெண்ணுப் பெயர் உயிரீருக வழங்கிற்று? அல்லது மெய்யீருக வழங்கிற்று? என்பதை விளக்குவதே இக்கட்டுரை.

உருபுப்புணர்ச்சியில், தொல்காப்பியர் முற்றுகரத்தைப் பற்றிக் கூறுகின்றார். அதற்கடுத்த நூற்பாவில் குற்றுகரத்தைக் குறிக்கின்றார். 'சந்தனக்கோல் குறுகின விடத்துப் பிரப்பங் கோலாகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் உயிர் ஆகற்பாலன' என்பது 'இகர உகரங்கள் உயிரீறே' என்பதை விளக்க இளம்பூரணர் தந்த எடுத்துக்காட்டு மொழி குற்றுகரம் உயிரீறு என்பதை உணரும் நாம், முற்றுகரமும் உயிரீறே என்பதை உய்த்துணர்ந்துகொள்ள வேண்டும். இதைத் தொல்காப்பியர் கருத்தை வைத்து விளக்க முற்படுகின்றேன்

முற்றுகரத்தைப்பற்றிய நூற்பா,

**'அன்னென் சாரியை**
**ஏழன் இறுதி**
**முன்வரத் தோன்றும்**
**இயற்கைத் தென்ப'**

(தொல்-எழுத்-இளம்பூரணம்-195)

(எ-டு) ஏழு + அன் + ஐ = ஏழனை, என்று புணரும். இதில் 'அன்' என்பது சாரியை; 'ஐ' என்பது இரண்டாவதனுருபு.

குற்றுகரம் பற்றிய நூற்பா,

**'குற்றிய லுகரத்**
**திறுதி முன்னர்**
**முற்றத் தோன்றும்**
**இன்னென் சாரியை'**

(தொல். எழுத். 196)

(எ-டு.) நாகு + இன் + ஐ = நாகினை, எனப் புணரும். இதில், 'இன்' சாரியை, 'ஐ' உருபு. இஃதெங்ஙனம் புணர்ந்ததோ எனின்,

**'புள்ளி யீற்றுமுன்**
**உயிர்தனித் தியலாது**
**மெய்யொடுஞ் சிவணும்**
**அவ்வியல் கெடுத்தே'**

(தொல். எழுத்து-139)

என்ற விதியாற் புணர்ந்ததாகும்.

ஆல் + அடை = ஆலடை என வரும் மெய்யீற்றுப் புணர்ச்சிக்குத்தான் இவ்விதி பொருந்துமே தவிர, உயிரீற்றுப் புணர்ச்சியாகிய குற்றுகரவீற்றுக்கு இவ்விதி எங்ஙனமமையும்? எனக் கேட்கலாம்.

'புள்ளியீற்று முன் உயிர் தனித்தியலாது' என்று கூறுகிறது நூற்பா. 'புள்ளியிறுகள்' எனப் பெயர் பெற்றவை எவையெனத் தெரிதல் வேண்டும்?

1. 'குற்றியலிகரம். 2. குற்றியலுகரம். 3. ஆய்தம். 4. மெய்யெழுத்துக்கள்' என இவை நான்கும் புள்ளியிறுதிகள் அல்லது புள்ளியெழுத்துக்கள் எனப் பெயர் பெறும்' என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

சான்று—முதல் மூன்றிற்கு,

அவைதாம்—

**குற்றியலிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்த மென்ற**
**முப்பாற் புள்ளியும்**
**எழுத்தோ ரன்ன.**

(தொல். எழுத்து-2)

மெய் யெழுத்திற்குச் சான்று:

**மெய்யின் இயற்கைப்**
**புள்ளியொடு நிலையல்.**

(தொல். எழுத்து-15)

குற்றியலுகரத்திற்கும் மற்ற இரு சார்புக்குஞ் சான்று:

**மெய்யின் அளபே**
**அரையென மொழிப.**

(தொல். எழுத்து-11)

**'அவ்வியல் நிலையு**
**மேனை மூன்றே'**

(தொல். எழுத்து-12)

குற்றியலுகரத்திற்குச் சான்று:

அவற்றுள்—

**'மெய்யி றெல்லாம்**
**புள்ளியொடு நிலையல்'**

(தொல்-எழுத்து-105)

**'குற்றிய லுகரமும்**
**அற்றென மொழிப'**

(தொல்-எழுத்து-106)

எனத் தொல்காப்பியரே இவற்றைப் புள்ளியெழுத்துக்களென்றும்- புள்ளியிறுதிகளென்றுங் கூறுவதால், **குற்றிய லுகரமும் புள்ளியிறுதியெனப் பெயர் பெறுமென்பதைக் குற்றியலுகரம் கூறும் வழியால் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.**

மெய்யீற்றுக்கும் புள்ளியீற்றுக்கும் நுணுகிய வேறுபாடு இருப்பதையும் நாம் இங்கு தெரிந்துகொள்ள வேண்டும். தொல்காப்பியர், எழுத்ததிகாரத்தில், 139-வது நூற்பாவில் கூறியதிலிருந்தே இதைத் தெளிவாக உணரமுடியுமெனக் கருதுகிறேன். **மெய்யீறென்பது, உடலெழுத்திற்குச் சிறப்பாகவுள்ள பெயராகும். புள்ளியீறென்பது, மற்ற நான்கெழுத்துக்களையும் உடன் கொண்டு பெறு பெயராகும்.** ''புள்ளியீற்று முன் உயிர் தனித்தியலாது'' என்று முதல் அடியில் கூறிய ஆசிரியர் 'மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே' என அடுத்த வரியிற் சிறப்பாகப் புள்ளியீறு பெற்ற உடலெழுத்திற்கு இலக்கணம் வகுக்கின்றார். முதல் வரியிற் கூறிய இலக்கணம், குற்றிகரம்-குற்றுகரம்-முற்றுகரம் முதலியவற்றிற்குக் கூறிய விதியாகும். எனவேதான் இருகூருகப் பகுத்து, **'புள்ளியிறுதி'** என்றும், **'மெய்யொடும்'** என்றும் கூறுகின்றார்.

இதைச் சிறப்பாக உணராத இளம்பூரணரும், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும், அவற்றுள்,

**'மெய்யீறெல்லாம்**
**புள்ளியொடு நிலையல்'**

(எழு-105)

**'குற்றிய லுகரமும்**
**அற்றென மொழிப'**

(எழுத்-106.)

என்ற நூற்பாக்களுக்கு, மயங்க உரை வகுத்து மாட்டேற்றைத் தவருகப் புலப்படுத்தினர். அவர்களின் தவறைச் சிவஞான முனிவர் எடுத்துக் கூறி, தாம் விளக்கந் தராது-ஒரு விதண்டா வாதத்தைக் காட்டிச் சென்றார்.

மேலே காட்டியவற்றிலிருந்து புள்ளியீற்றுமுன் உயிர் வரும் வழி-அவ்வுயிர் தனித்து நில்லாமல் புள்ளியீற்றுடன் சேர்ந்து புணர்ந்தே நிற்கும். அதுபோல, மெய்யீற்றின் முன் உயிர் வரும் வழித் தனித்து நில்லாது மெய்யீற்றுடன் சேர்ந்து புணர்ந்தே நிற்கும். என்பதைத் தெளிந்தோம். எனவே, புள்ளியிறுதிகள் என்பவை உயிரீறே என்பது தொல்காப்பியரின் முடிந்த முடிபு. குற்றுகரம் புள்ளியிறுதி யெனின், அதனோடு ஒருபுடை ஒப்புமையுள்ள முற்றுகரமும்புள்ளியிறுதி-அஃதாவது உயிரீறேயாகும் என்பதை ஆராய்ச்சி மிக்கவர் உணர்ந்துகொள்ள முடியும். இனி அடுத்த சான்றை ஆய்வாம்.

'ஏழு' என்பதை முற்றுகரம் எனக் கூருமல், 'ழகர உகரம்' என ஒரு நூற்பாவிற் கூறுகின்றார். 'ழகர உகரம்' என்று கூறுவதால், அது மெய்யீருகுமா! குற்றிகரத்தையும்-குற்றுகரத்தையும், 'இகர உகர' மென்று தொல்காப்பியரே கூறுவதால், அவை, ஒரு மாத்திரையைப் பெறும் உயிரெழுத்துக்களாகா. அரை மாத்திரையைப் பெறும் குறுகிய, இகர உகரத்தையே குறிக்கும்.

**'யகரம் வரும் வழி**
**இகரங் குறுகும்**
**உகரக் கிளவி**
**துவரத் தோன்ருது'**

(தொல்-எழு. குற்றியலுகரப் புணரியல்-5)

அதுபோல, 'ழகர உகரம்', என்று கூறினலும், அது முற்றுகரத்தையே குறிக்குமென உணர்க.

**'ழகர உகரம் நீட்ட னுடைத்தே**
**உகரம் வருதல் ஆவயினன'**

(தொல்-எழுத்து-262)

என்பது அந்நூற்பா.

(எ-டு): 'எழூஉக்கதவு' என்று வழக்கிடத்தும்,

**எழூஉத்தாங்கிய**
**கதவு மலைத்தவர்**
**குழூஉக்களிற்றுக்**
**குறும்புடைத்தலின்**

(புறம்-97)

எனச் செய்யுளிடத்தும் வந்துளதால், உயிரீறே எனத் துணியலாம்.

'ழகர உகரம்' நீட்டனுடைத்தே என்பதால் 'ஏழு' என்பது 'நெடுமுதல் குறுகலும' என்ற விதிப்படி-'எழு' என்ருகிப்பின், 'எழூ' என நீண்டு, 'உகரம் வருதல் ஆவயினன' என்ற விதிப்படி 'எழூஉ'வென வந்துள்ளதை அறிய முடிகிறது. எனவே, ஏழென்னு மெண்ணுப் பெயர் உயிரீறே என்பதை இதனுலுந் தெளியலாம். இன்னும் இரு சான்றுகளாலும் 'உயிரீறே' என்பதை நிலைநிறுத்த முடியும்.

'ஏழென்னுமெண்ணுப் பெயர் உருபுப்புணர்ச்சிக்கண் என்ன விதி பெற்றுப்புணர்ந்ததோ அதே விதியாகிய 'அன்' பெற்றுப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் புணரும் என்பதை,

**'ஏழென் கிளவி**
**உருபியல் நிலையும்'**

(தொல்-எழுத்து-389)

என்ற நூற்பாவால் விளக்குகின்றார்.

(எ-டு) ஏழு + அன் + காயம் = ஏழன்காயம்.

— 11-ம் பக்கம் —

## மதுரை மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு:

*மதுரை நகரிலும் மாவட்டத்திலும் பொதுச் செயலாளர் அவர்கள் அறிக்கைப்படி 30-6-59க்குள் தோழர்கள் தி. மு. க. உறுப்பினர்களாகும்படியும், அப்பணியினை நிறைவேற்றப் பின் வருவோரை வட்டப் பொறுப்பாளர்களாக நியமித்துள்ளதாகவும் வட்டப் பொறுப்பாளர்களிடம் தோழர்கள் தேவையான உறுப்பினர்ப் பதிவு பாரங்களைப் பெற்றுக்கொள்ளும்படியும்,* **மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து** *அவர்கள் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

**நியமிக்கப்பட்டுள்ள வட்டப் பொறுப்பாளர்கள்:**

| | | |
|---|---|---|
| **எஸ். முத்து**, மதுரை | **—மதுரை** | **வட்டம்** |
| **தா. ஆவுடையப்பன்**, சோழவந்தான் | **-நிலக்கோட்டை** | ,, |
| **அனிபா எம். சி.**, பெரியகுளம் | **—பெரியகுளம்** | ,, |
| **கே. எம். எம். மேத்தா**, கொடைக்கானல் | **—கொடைக்கானல்** | ,, |
| **விக்கிரமாதித்தராசன்**, திண்டுக்கல் | **—திண்டுக்கல்** | ,, |
| **பி. எஸ். ஷேக்**, பழனி | **—பழனி** | ,, |
| **பி. பெரியசாமி**, திருமங்கலம் | **—திருமங்கலம்** | ,, |
| **சி. காதர்கனி**, மேலூர் | **—மேலூர்** | ,, |

**மதுரை நகரில்**—*பகுத்தறிவுப் பாசறை, தியாகராயர் படிப்பகம், மறுமலர்ச்சிக் கழகம், தாளமுத்து நடராசன் படிப்பகம், முதலிய படிப்பகத்தாரும், திரு. முனியப்பன், 98, இராமநாதபுரம் ரோடு, மதுரை அவர்களும் தம் தம் வார்டுகளில் உறுப்பினர் சேர்ப்பார்கள்.*

—3 ம் பக்கத் தொடர்ச்சி—

'எங்கே போவணும் நயினு...ஏறு'

வேலன் நிமிர்ந்து தைரியத்தை வரவழைத்துக்கொண்டான்:

'நடிகை காந்தா வீட்டிற்குப் போகணும்...'

'ஓ!...நடிகை காந்தா பங்களா விலே வேலைக்காரனு நீ ..'

'ம்'...வேலன் உறுமினுன். ரிக்ஷாக்காரன் ஓடிக்கொண்டேயிருந்தான்; வேலன் சென்னை மாநகரின் அலங்கார அடுக்கு மாளிகைகளின் பெயர்ப் பலகைகளை, குமுறும் நெஞ்சத்தோடிருந்த அந்த நேரத்திலும் மெய்மறந்து வாசித்துக்கொண்டே வந்தான்

கூலியைப் பெற்றுக்கொண்டு ரிக்ஷாக்காரன் சென்றுவிட்டான்; காந்தாவின் 'பங்களா', வேலனின் மனக்கண்முன் மானசீகமாக உருவகப்படுத்தி எதிர்கால இன்ப வாழ்வின் அன்பின் சின்னமாக, காதல் கூடாரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்த மாங்குடிக் கிராமத்துப் 'பங்களா'வைவிட பன்மடங்கு பெரிதாக, கம்பீரமாகக் காட்சி தந்து கொண்டிருந்தது. உள்ளே போவதா வேண்டாமா என்று சஞ்சலத்துடன் வாசலில் நின்றுகொண்டிருந்த வேலன், வெளிச்சுவரைத் தாண்டி தன்னருகே வந்துகொண்டிருந்த புத்தம் புதிய 'காரை'ப் பார்த்துவிட்டான்; வேலன் நடுங்கும் தன் உள்ளத்தை சமாதானப்படுத்த தொண்டையை கணைத்துக்கொண்டான்...

'கா...ந்...தா.. க ண்...ண ம் மா...'என்று குரல் எழுப்ப எண்ணினுன். 'குரல்' ஒலி பரப்பவில்லை; வேலை நிறுத்தம் செய்தது...கார் அவனருகே நெருங்கிவிட்டது; அவனைத் தாண்டி ஓடவில்லை. அவனை ஏற்றிக்கொண்டு திரும்பவும் 'காந்தா நிலையத்திற்குள் நுழைந்தது... அந்தப் பெரிய வீட்டினுள் வேலன் மெய்சிலிர்த்து நின்றுன்: கதிர்வேலு கணைத்துக்கொண்டே வந்தார்; அவர் காதுகளில் வைரத்தோடு மின்னிக் கொண்டிருந்தது.

'வா...வேலு...பட்டணம் பார்க்க வந்தியா ?'

காலம் உண்டுபண்ணுத மாற்றத்தை...சில சமயங்களில் வசதி உண்டுபண்ணிவிடும் விநோதத்தை வேலன் கண்களெதிரே கண்டு நின்றுன்: கதிர்வேலுவின் தோற்றமா அது ?

'வா...அத்தான்... குளித்துவிட்டு 'டிரஸ்' மாத்திக்கிட்டு... என்னேடு ஸ்டுடியோவுக்கு வா...ம்... டயம் ஆயிடுச்சு...'

அப்பா!...கண்ணம்மாவா அவள்? அழகும், வைர அணிமணிகளின் புது அமைப்பும், வேலனது எண்ணத்திலே தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தாமல் வேறு என்ன செய்யும்? உடல் குன்றி நின்றுன்; கண்ணம்மா... அல்ல அல்ல-நடிகை மிஸ். காந்தா அவனைத் தொட்டிழுத்துச் சென்றுள்.

புது மனிதனுக மாறினுன் வேலன். அந்த ஆடை அணிகளின் தோற்றத்துடன் அவனைப் பார்த்தால் யாருமே அடையாளம் கண்டுகொள்ள முடியாது.

ஸ்டுடியோ மனிதர்கள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்; அவனது எதிர்கால 'அதிர்ஷ்டத்'தை எண்ணிப் பொறுமினுர்களோ என்னவோ ?

காந்தா எல்லோருக்கும் வேலனை அறிமுகப்படுத்தினுள்; அவள் எல்லோரோடும் சிரித்துப் பேசிப் பழகுவதை வேதனையோடு கண்டான் 'ஓடக்கார' வேலன்:

'மேக் அப்' அறைக்குச் சென்று திரும்பி வந்தாள் காந்தா; படப்பிடிப்பு ஆரம்பமாகியது...வெளிப்புறக் காட்சிகளின் சிரமங்களை உணர்ந்த படப் பிடிப்பாளர்கள், ஸ்டுடியோவிலேயே ஒரு அற்றங்கரைக் காட்சியை அமைத்திருந்தார்கள்

காதலி, காதலனைச் சந்திக்கும் கட்டம்; படப்பிடிப்பு ஆரம்பமாகியது; ஓடக்காரன் கேட்கிறுன்.

'புடவை எடுத்தாச்சா ?'

'ஓடக்காரன் காதலி' புன்முறுவலோடு பதில் சொல்கிறுள்.

'எடுத்தேன் மச்சான்...'

'எவ்வளவுக்கு ?'

'எட்டு ருபா...'

'சல்லீசுதான்...கன்னிப் பொங்க' லுக்கு மாங்தோப்புக் கூட்டாஞ் சோறு ?'

'கட்டாயம் வரணும்.. மச்சான்'

'வராம இருப்பேனு... கண்ணு எனக்கு என்ன வாங்கியாந்தே ?'

கரும்புத்துண்டு...காந்தா'

'கட்...கட்...ஓகே... 'டைரக்டர் கத்தினுர் ஒளி விளக்குகள் அணைந்தன; படப்பிடிப்பு முடிந்தது; காந்தா வேஷத்தைக் கலைக்காமலே வேலனருகே வந்தாள். வேலன், கதாநாயகனுக நடித்த' 'ஓடக்காரனுக' நடித்த நடிகனையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் இதயத்தின் மூலையில் எங்கே ஒரு வேதனைச் சுரங்கம் வெடிப்பதாக உணர்ந்த நேரத்தில், காந்தா தோளைப் பிடித்து உலுக்கினுள்; வேலன் அவளோடு எழுந்தான்.

மறு நாள் காலை வேலனை எழுப்ப வந்த காந்தா திகைத்து நின்றுள்; கடிதம் ஒன்று அவள் கண்களில் பட்டது. எடுத்தாள்; படித்தாள். அன்புள்ள கண்ணம்மா!

தலையணைக்கடியில் ஆயிரம் ரூபாய் வைத்திருக்கிறேன். நான் கிராமத்துக்குப் போகிறேன். உன்னைப் பார்க்கப் பட்டிணத்திற்கு வரவில்லை நான்; அழைத்துப் போகவே வந்தேன்; இப்போதுகண்ணம்மாவை என்னேடு கூட்டிச் செல்கிறேன். காந்தா மாங்குடி கிராமத்துக்கு வரவே வேண்டாம்...புதிய வாழ்வைப் பெற்ற காந்தா, காந்தாவாகவே இருக்கட்டும். பழைய கண்ணம்மாவாக அவள் ஆனுலும் அது நிலைக்குமோ...என்னவோ... என்னையிட்டு அவள் ஏன் தன் புது வாழ்வைக் குலைத்துக்கொள்ள வேண்டும். மாற்றிக்கொண்டாலும் அது நிலைக்குமோ...என்னவோ... ? கதிர்வேலு மாமாவுக்கு என் வணக்கம்.

இப்படிக்கு,
வேலன்"

காந்தாவின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது; 'ஓடக்காரன் காதலி' படத்தின் 'ஸ்டில்' போட்டோக்களை எடுத்துக்கொண்டு டைரக்டர், காந்தா நிலைய வாசலில் காரிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தார்.

— இரா. விசுவநாதன்



# வினா – விடை

## "கூடலரசன்" பதிலளிக்கிறார்

சொ. இராமநாதன்,
திண்டுக்கல்.

**முன்னேற்றக் கழகத்தினர் வெள்ளையர்களுக்கு வால் பிடிப்பதனால்தான் வடவரைத் திட்டுவதுபோல் அவர்களைப்பற்றிப் பேசுவதில்லை என்று கம்யூனிஸ்ட் பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டது சரியா?**

கம்யூனிஸ்ட்களின் அரசியல் குருட்டுத் தன்மைக்கு இந்தச் செய்தி ஒரு சான்றாகிறது. மாஸ்கோவிலிருந்தும் பீகிங்கிலிருந்தும் உத்திரவுகளை எதிர்பார்த்துக் கட்சி நடத்துபவர்கள், கழகத்தவரை வெள்ளையர் தாசரென்று பேசுவது, அவர்கள் அரசியல் அறிவைப் பறிகொடுத்துவிட்டார்கள் என்று அறிமுகப்படுத்துவதாகும்! வடவர் ஆதிக்கம்பற்றிப் பேசுவது தவறென்று நிரூபிக்காத கம்யூனிஸ்ட்கள் இத்தகைய இழி செயல்களில் –ஆங்காங்கே நடைபெறும் பொதுக் கூட்டங்களில் ஈடுபடுகிறார்கள்; பேசுகிறார்கள்; புலம்பித் திரிகிறார்கள்!

★

க. நா. நெடுமாறன்,
கரைஎல்லப்பாளையம்.

**தலைலாமா இந்தியாவில் தங்கியிருப்பது, இந்தியாவுக்கு ஏதாவது ஆபத்தைத் தருமா?**

மனித வேட்டைக்காரர்களான சீனக் கம்யூனிஸ்ட்களிடமிருந்து தப்பிப் பிழைத்த தலைலாமாவின் எதிர்காலத்தை கணக்கிட்டுச் சொல்லமுடியாது. ஆனால் அதன் காரணமாக இந்தியாவைப் பகைத்துக்கொள்ள சீனத்தலைவர்கள் தயாராக இல்லை! நேரு சர்க்காரின் போக்கைக் கண்டிக்கும் சீனப் பத்திரிகைகளும், இந்தியக் கம்யூனிஸ்ட்களும்கூட லாமாவுக்குத் தஞ்சமளித்ததைஇன்றுவரையிலும் கண்டிக்கத்துணியவில்லை! இந்தியாவைத் தாக்கி ஆபத்தைத் தருவதற்கு சீனக் கம்யூனிஸ்ட்கள் துணிந்தால், இந்தியாவிலே உள்ள அவர்களின் ஐந்தாம் படையினர் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். அப்போது தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களைக் கண்காணிக்க வேண்டிய கடமை, கேரளத்துக் கம்யூனிஸ்ட்களை தடுக்கவேண்டிய கண்ணியம், சென்னகத்துப் பொதுமக்களுக்குத்தான் இருக்க வேண்டும்!

★

கி. சுந்தரராசன், சிவகிரி.

**கம்யூனிஸ்ட்கள் திராவிடத்தின் விடுதலைக்கு ஆதரவு தராதது ஏன்?**

மக்களாட்சிப் பண்பையும் நெறியையும் காப்பாற்ற வேண்டிய கம்யூனிஸ்ட்கள், ஒரு நாடு சுயாட்சி வேண்டி நின்றால் அதனை ஆதரிக்க வேண்டிய கம்யூனிஸ்ட்கள், கழகத்தின் கண்ணியத்திற்கும் பிரிவினைக் கொள்கைக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில்தான் திராவிடத்தின் விடுதலையை எதிர்க்கிறார்கள்! இதனை ஆதரித்து ஒப்புக்கொள்ள ஆசையிருந்தாலும் அகில இந்தியப் பித்தம் தலைக்கேறியிருப்பதால் காலதாமதத்திற்குப் பின்னால்தான் திராவிடத் தனிநாட்டுத் தத்துவத்தைப் புரிந்துகொள்வார்கள். உருப்படாத உலகக் கண்ணோட்டக்காரர்கள் வருங்காலத்திலாவது தங்களைத் திருத்திக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்போம்!

★

சி. சு. தேவராசன், லால்குடி.

**நேருவைக் குருஷ்சேவ் மறுபடியும் ரஷ்யாவுக்கு அழைத்திருப்பதின் நோக்கம் என்ன?**

திபேத் விவகாரத்தில் சீனாவுக்கு எதிராக இந்திய சர்க்கார் செயல்பட்டிருப்பதால் பண்டித நேருவின் வாயிலாக சில பஞ்ச சீலப் பண்புகளை விட்டுக் கொடுக்கும்படி கேட்பதற்காக அழைத்திருக்கக் கூடும். பீகிங் நகரத்துச் சீமான்களுக்குப் புத்தி சொல்ல வேண்டிய குருஷ்சேவ் நேருவை அழைத்திருப்பது அரசியல் அநாகரிகமாகும்!

★

கம்யூனிஸ்ட் மணி,
காஞ்சீபுரம்.

**வடநாட்டு ஆதிக்கத்தை ஒழிக்க முயலும் தாங்கள் தமிழில் வடமொழிச் சொற்களை உபயோகப்படுத்துவது ஏன்?**

வடநாட்டு ஆதிக்கமென்றால் என்ன என்பதை உங்களைப் போன்ற கம்யூனிஸ்ட்கள் புரிந்துகொள்ளவில்லை. தெரிந்துகொள்ளவும் முயற்சிக்கவில்லை என்பதைத்தான் இந்தக் கேள்வி உணர்த்துகிறது. வடநாட்டு ஆதிக்கத்தை ஒழிக்க முயலும் முறையில் சந்தேகமிருந்தால் கேளுங்கள், குறையிருந்தால் எடுத்துக் காட்டுங்கள்! வடமொழிச் சொற்களைக் கலந்துவிட்டதாகக் கண்டிருந்தால் ஆதாரத்துடன் எழுதுங்கள்; விளக்கம் தருகிறேன். வினாவின் முற்பகுதியும் பிற்பகுதியும் தொடர்போடு இல்லை. கேள்வி கேட்க வேண்டிய நெறிமுறைகளைக்கூடக் கழகத்தவர் சொல்லித் தரவேண்டிய நிலையில் கம்யூனிஸ்ட்கள் இருப்பதற்கு வருந்துகிறேன்.

★

ஜி. கே. வேலன்,
சத்திரப்பட்டி.

**மதுரை நகர சபைத் தேர்தலில் போட்டியிட்ட 12 கம்யூனிஸ்ட்களும் வெற்றி பெறக் காரணம் பண பலமா? அல்லது கள்ள ஓட்டுக்களா? பதில் தருக.**

மதுரைக்கு வெளியே உள்ள எல்லாக் கம்யூனிஸ்ட்களும் கம்யூனிஸ்ட்களின் வெற்றியை கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பெரிய வளர்ச்சியின் வெற்றியென்று பறை சாற்றுகின்றனர். உண்மையில் எதிர்க் கட்சிகளின் கூட்டணி அமைப்புத்தான் இந்த வெற்றிக்குக் காரணம். காங்கிரஸ் தவிர்த்த மற்றக் கட்சிகள் ஒன்றுக்கொன்று போட்டியிடாமல் ஒத்துழைத்துப் பணியாற்றின. வெற்றி விழாக் கொண்டாடிய கம்யூனிஸ்ட்கள்கூட கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றியென்று துணிந்து பொய் சொல்ல முடியாமல் மக்கள் வெற்றி விழா என்றுதான் விளம்பரப்படுத்தினார்கள்! நன்றியுணர்வு உடையவர்களாக இருந்தால் எதிர்க்கட்சிக் கூட்டணியின் வெற்றியென்றும் சொல்லியிருக்கலாம்! தேர்தல் காலத்தில் பதவியாசையில்லாதவர்களாக நடித்துக் காட்டிய கம்யூனிஸ்ட்கள் மதுரை நகர சபைத் தலைவர் தேர்தல்பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை, ஜனநாயக காங்கிரஸ்காரர்களுடன் அவர்கள் நடத்தியிருக்கும் பேரப் பேச்சுக்கள் மூலமாக அவர்கள் எதையோ எதிர்பார்த்து ஏமாந்துவிட்டார்கள் என்பதைத்தான் உறுதிப்படுத்துகின்றது! மதுரை நகர்க் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் நிதி ரூ. 10000 ஐந்து நாட்களில் வசூல் செய்யப்பட்டது. விழாவை நடத்தி வைத்தவர் கேரளத்துக் கம்யூனிஸ்ட் தலைவர் கோவிந்தன் நாயர். கள்ள ஓட்டுப் போட்டார்களா என்று நீங்கள் சந்தேகப்படுவது போலத்தான் காங்கிரஸ்காரர்களும் பேசிக் கொள்கிறார்கள்!

★ ★ ★

— 9-ம் பக்கத் தொடர்ச்சி —

புள்ளி மயங்கியலில் இந்நூற்பாக் கூறப்பட்டிருப்பதாலும்–புள்ளி மயங்கியல் என்பது மெய்யீறுகள் மயங்கிப் புணரும் இயல் என விரிவதாலும் – இப்பெயர் மெய்யீறேயாகும் எனக் காட்டுபவர் உள்ளனர். அது பொருந்தாது. புள்ளியெழுத்துக்களென்றால், மெய்யெழுத்துக்களை மட்டும் குறிப்பதில்லை. எனவே, புள்ளி மயங்கியலென்றாலும்–அது மெய்கள் மயங்கிப் புணர்வதை மட்டும் தெரிவிப்பவையல்ல. மற்றவெழுத்துக்கள் மயங்கிப் புணர்வதையும் உணர்த்துகிறது என்பதைச் சிந்தித்துத் தெளிய வேண்டும். (எ–டு.) முற்றுகர வீறு புணர்வேதயாகும். புள்ளிமயங்கியலுக்குப் பிறகு குற்றியலுகரப்புணரியலை வைத்தற்கும் காரணம் இருக்க வேண்டும். முற்றியலுகரமும் புள்ளியீறே எனப் பெயர்பெறும் என்பதைக் கருதியே, இவ்வியலுக்குப்பின், குற்றியலுகரப் புணரியலை வைத்தார் எனக் கொள்ளவேண்டும். இதன் தன்மையை முதல் எடுத்துக்காட்டிலேயே தெளிவாகக்கூறியுள்ளோம் 'உயிரீறு அல்ல–மெய்யீறே என்று பின்னும் சாதித்தால், உகரங்கெட்டு நின்ற மொழியைப்புள்ளிமயங்கியலில் கூறுகின்றார்' என்பதாகக் கொள்ள வேண்டும். இங்ஙனம் ஆசிரியர் கொள்ளும், நூற்பாக்களும், மொழிகளுமுள்ளன. என்பதை தொல்காப்பியம் எழுத்ததிகாரம் படித்தோர் நன்குணர்வர். எனவே, இந்நூற்பாவும் உயிரீறே என்பதைக் காட்டுகிறது.

'அளவும் நிறையும்
எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும்
உகரம் வருதலும்
கடிநிலை யின்றே
யாசிரியார்க்கு'
(தொல்–எழுத்து 390)

என்ற நூற்பாவிற்கு, 'ஏழு' என்பது அதிகாரத்தால் வந்தது. இதில் 'உகரம் வருதலும்' என்று கூறியிருப்பதால், முன்னே பெற்று நின்றது மெய்யீறே என்பதை உணரலாம். ஆகவே, இப்பெயர் மெய்யீறே என்பது தொல்காப்பியர் முடிபு எனக் காட்டுவாருமுளர். அது தெளிந்த அறிவைக் காட்டுவதாகயில்லை.

முன்னே. 'உகாரங் கெட்டு நின்ற 'ழ'கர மெய்யென்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்தது அதை நாம் உய்த்துணர்ந்துகொள்ள வேண்டும். முன்னர் கெட்டு நின்ற 'உகரம்' அளவும்–நிறையும் எண்ணும் வரும் வழி கெடாது நிற்றலும் உரித்தென்பதற்கறிகுறியாக, உகாரம் வருதலும்' எனக் கூறுகின்றார்.' முன்னே கெட்டு நின்றதையோ அல்லது பெற்று நின்றதையோ ஏற்றி நூற்பா செய்தல் ஆசிரியர் வழக்காதலின், இந்நூற்பாவையும் அங்ஙனமே அமைத்தார். ஆகவே, ஏழென்னும் எண்ணுப் பெயர் உயிரீறே என்பது தெளிந்த முடிபாகும்.

இதுகாறும் கூறிய நான்கு சான்றுகளால், பேராசிரியர் தொல்காப்பியரின் முடிந்த முடிபு, இவ்வெண்ணுப் பெயரின் இறுதி உயிரீறே என்பதை உணரலாம். 'மெய்யீறே' என்று காட்ட விழையுமன்பர்கள் ஏற்ற வேதுக்களோடு ஐயந்திரிபறக் கூற வேண்டுமெனக் கோருகிறேன்.

–க. சி. இராசியண்ணன்






ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்…